விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 20 புதன்கிழமை (06.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 291

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சீனாவும் இந்தியாவும் இணைந்து இலங்கையை காப்பாற்றுகின்றன

## புலிகளை தோற்கடிக்கவும் உதவினவாம்

(கொழும்பு)

**போருக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் இந்தியா மற்றும் சீன அரசுகள் இணைந்து இலங்கையைக் காப்பாற்றியுள்ளன என கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**

மேற்குலகம் விடுதலைப்புலிகளை காப்பாற்ற முயன்றபோதும், இந்தியாவும், சீனாவும் வழங்கிய உதவிகளால்தான் இலங்கை, விடுதலைப்புலிகளை முறியடித்துள்ளதாக த ரைம்ஸ் சஞ்சிகை தனது பத்தி ஒன்றில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, போரில் மட்டுமல்லாது, போரின் பின்னரும் சீனாவும், இந்தியாவும் இணைந்து இலங்கையை காப்பாற்றியுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை (18ஆம் பக்கம் பார்க்க)

## எட்டு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியருக்கு இடமாற்றம்

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

ஒரே பாடசாலையில் 8 வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாணவர்களைப் பாதிக்காத விதத்தில் ஜனவரி மாதம் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாடு குறித்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய வாய்மூல கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே அமைச்சர் - (18ஆம் பக்கம் பார்க்க)

## பாணின் விலை இன்று முதல் 48 ரூபாய்

(யாழ்ப்பாணம்)

பாணின் விலை 48 ரூபாயாக இன்று முதல் விற்பனை செய்யப்படும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

மாவின் விலை அதிகரித்ததையடுத்து பாண் மற்றும் பணிஸின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேற்குறிப்பிட்ட விலைகளைவிட அதிகரித்து விற்பனை செய்வது, குறித்த நிறைகளில் குறைவு (18ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு ரணில் ஜனாதிபதியிடம் கோரிக்கை



(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் 30 மாத கடுழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்கும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கி அவரை விடுதலை செய்யக் கோரி ஜனாதிபதிக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக உத்தியோகபூர்வ கடிதத்ததை அனுப்பிவைத்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 26ஆம் பட்டமளிப்பு விழா இன்று


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பட்டமளிப்பு வைபவம் இன்று காலை 9.00 மணிக்கு நான்கு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

தேசத்தின் நெருக்கடியான சூழமைவால் நீண்ட நாட்களாக இடம்பெறாதிருந்த பட்டமளிப்பு வைபவம் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. இதில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள் பட்டம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இன்றைய பட்டமளிப்பில் மேலும் 1000க்கும் அதிகமான மாணவர்கள் பட்டம் பெறவுள்ளனர். இதில்,

மருத்துவம் 72, கலை 320, விவசாய விஞ்ஞானம் 19, விஞ்ஞானம் 33 முகாமைத்துவம் 93, வர்த்தகம் 29, உயர்பட்டபடிப்புக்கள் 178 அடங்குவர்.

யாழ்ப்பாணப் (18ஆம் பக்கம் பார்க்க)




**ஆசிரியப் பெருந்தகைகளுக்கு**

**உளம் கனிந்த வாழ்த்துக்கள்**

ஆசிரியர் தினத்தை இன்று கொண்டாடும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக

கல்விப் பகுதி - வலம்புரி

## மின்சாரம் பெற முயன்ற சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பற்ற முறையில் மின்சாரம் பெற முயன்ற சிறுவன் ஒருவன் மின்சாரம் தாக்கி பலியாகியுள்ளார். இச் சம்பவத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவனும் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்தவருமான செல்வரத்தினம் மயூரன் (வயது 15) என்ற சிறுவனே பலியானவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், குறித்த சிறுவன் கையடக்கத் தொலைபேசியை மின்னேற்றம் செய்வதற்காக (சார்ச்) சட்ட விரோதமாக மின்சாரத்தைப் பெற முயன்றபோதே மின்சாரம் தாக்கிப் பலியானார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ச-5)

## அமெரிக்க தூதுவர் மீது வீரவன்ச பாய்ச்சல்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்க தூதுவரை உடனடியாக அந்த பதவியில் இருந்து நீக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் இருந்து வெளிநாட்டு இராணுவத்தினர் விலகிக் கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்க தூதுவர் அண்மையில் தெரிவித்திருந்ததாகவும் இதன் காரணமாகவே அமெரிக்க (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
இன்று முதுகலைமாணி
(குடித்தொகை அபிவிருத்திக்கல்வி சார்
முதுகலைமாணி) பட்டம்பெறும்
யாழ் கம்பர்மலை மகாவித்தியாலய
ஆசிரியரும் எமது நண்பருமான

**சிவஞானம் சிவகாந்தன்**
*B.com, H.N.D.Acc, Dip.in.P.E, E.S.BM, MA merit)*

அவர்களை பாராட்டி
வாழ்த்துகின்றோம்



நண்பர்கள் :
பா.மணிக்குமார்
த.ரவிக்குமார்
தி.ரஞ்சித்

(சி-1223)

# வாழ்த்துகின்றோம்

## உலக ஆசிரியர் தினம் ஒக்டோபர் 06

இனிய நன்னாளில் எமது உடுவில் கோட்ட பாடசாலை அதிபர்கள் ,ஆசிரியர்கள் ,பாடசாலையில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் - அவர்தம் நிறைவான சேவைதனை கௌரவித்து நன்றி கூறுவதுடன் எமது மாணவச் செல்வங்களின் கல்வி மேம்பாடடைய அர்ப்பணிப்புள்ள சேவை தொடர இறை ஆசிகளும் நல்வாழ்த்துகளும் உரித்தாகுக.

(2616)

வாழ்த்துவோர்:-
கோட்டக் கல்வி அலுவலகம்
உடுவில்,
மருதனார்மடம்.
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
அலுவலக உத்தியோகத்தர்கள்,
கோட்டப்பாடசாலை கல்விச் சமூகத்தினர்.

# தவறிவிட்டது

சச்சிதானந்தம் வசந்தரூபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (533502482V) தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.
(இ)

# வீடு வாடகைக்கு

யாழ் நகருக்கு அண்மையில் 6 அறைகள் 2 குளியலறைகளுடன் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. 121,பற்றிக்றோட் பிரதான வீதியில் இருந்து 50m இல். மேலும் நிறுவனங்களுக்குப் பொருத்தமான வீடுகள் வாடகைக்குண்டு.
தொடர்புக்கு :
0779496985 (C-1347)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
இன்று நடைபெறும் பட்டமளிப்பு
விழாவில் பட்டம் பெறும்

**திருமதி வர்ச்சினி பிறேம்குமார்**
(B.A(Hons)- Specialization in Planning)

அவர்கள் மேலும் பல பட்டங்கள்
பெற்று பல்லாண்டு காலம் வாழ
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- சகோதரிகள்

(சி-1354)

# செல்லா சினிமா





காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

# பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில்
இன்று முதுகலைமாணிப் பட்டம் பெறும்
எமது வங்கியின் முகாமையாளர்

**திரு. நடராஜா பகீரதன்**
(MA merit)
(குடித்தொகை கல்வியியல்)



அவர்கள் மேலும் பல
பட்டங்கள்
பெற்று நீடூழி வாழ பாராட்டி
வாழ்த்துகின்றோம்

சக உத்தியோகத்தர்கள்
தேசிய சேமிப்பு வங்கி
சுன்னாகம்

(சி-1351)

# நெஞ்சார வாழ்த்துகின்றோம்



06.10.2010 இன்று யாழ். பல்கலைக்கழக 26 வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதிப்பட்டம் பெறும் திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்பணி கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரை நெஞ்சார வாழ்த்துவதுடன், நீடுவாழ இறைவனை வேண்டுகின்றோம்.

- திருமறைக் கலாமன்றம்
அழகியல் கல்லூரி சமூகத்தினர்.

(2613)

# விற்பனைக்கு

இல.96, காதி அபூபக்கர் வீதியில் சகலவசதிகளுடன் வீடும்கடையும், 33, கண்ணாபுரத்தில் 30 அடிநீளம் 15 அடி அகலம் கொண்ட பிளாட் கட்டிடத்தில் அமைந்த கடையும், 3 அறைகள் ,2 வராந்தா ,சமையலறை,குளியலறை வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு :
T.P : 0773317904
021 222 5975
(2604)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2010 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளிற்கு மேல் பெற்ற



ஸ்.ஆன்லக்ஷிகா
157



பெ.நிக்ஷன்
149

ஆகிய மாணவர்களையும் 70புள்ளிகளுக்குமேல் பெற்றுச்
சித்தியடைந்தவர்களான

| | | | |
|---|---|---|---|
| தே.அஜித்ராஜன் | - 134 | ரா.திவாகரன் | - 88 |
| அ.யொனியோய் | - 132 | அ.நிதர்சனா | - 86 |
| ம.லுகிர்தா | - 115 | ச.பிரியதர்சினி | - 80 |
| அ.அஞ்சலோசுஜீவன் | - 114 | ந.லக்கி | - 77 |
| ஞா.பெ.விதுரன் | - 112 | ஜெ.யூட்பவிதா | -76 |
| அ.அமல்ராஜ் | - 110 | பு.கஜனி | - 73 |
| சி.லக்ஷிக்கா | - 109 | ம.லுகிர்தா | - 73 |
| அ.டில்சான் | - 97 | சி.சுதச்செல்வன் | - 70 |
| தே.யான்சியா | - 89 | | |

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களை ஆரம்பக்கல்வி முதல் வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களை பாராட்டி நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்

பாடசாலைச் சமூகம்
யா/மாரீசன்கூடல் றோ.க.த.க. பாடசாலை
இளவாலை


(2617)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இராயப்பு அன்ரனி (MA)
(அபிவிருத்தி கல்விசார்
முதுகலைமாணி)

திருநாவுக்கரசு
யோகேந்திரன் (MA)
(திட்டமிடல் முதுகலைமாணி)





ஸ்ரீதரன் ஸ்ரீகிருஷ்ணன் (MA)
(குடித்தொகை அபிவிருத்தி
கல்விசார் முதுகலைமாணி)

சின்னராசா உதயமதி (MA)
(குடித்தொகை அபிவிருத்தி
முதுகலைமாணி)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும்
பட்டமளிப்பு விழாவில் பட்டம்
பெறும் எமது முகாமையாளர்களை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

சக முகாமையாளர்களும்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(சி-1352)

# இன்று ஒரு தகவல்

## மன்னரும் கவிஞரும்

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருடைய பெயர் போஜ ராஜா. அவரது அரசசபையில் ஒரு கவிஞர் இருந்தார். அவருடைய பெயர் காளிதாசர்.

"என்ன இது? இதெல்லாம்தெரிந்த பெயர்தானே? ஏதோ புதிதாக சொல்வது போல் ஆரம்பிக்கிறீர்களே" என்று நினைக்கிறீர்களா?

சின்னப் பிள்ளைகளுக்கு இப்படி ஆரம்பித்தால்தான் பிடிக்கும். அதனால் அப்படி ஆரம்பித்தேன். வேறொன்றுமில்லை. இப்பொழுது விடயத்துக்கு வருகிறேன்.

போஜராஜா ஒருநாள் காளிதாசரை அழைத்தார்.

"என்னைப்பற்றி ஒரு பாட்டுபாடு" என்றார். நீ பாடுவது எப்படி இருக்க வேண்டுமென்றால்...

"நான் இறந்து போனபின் நீ எப்படிப் பாடுவாயோ அப்படி இருக்க வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

"போஜராஜனே, அது மாதிரி நான் இரங்கற்பா பாடினால் நீ நிஜமாகவே இறந்து விடுவாய். ஏனென்றால் என் நாக்கில் சரஸ்வதிதேவி இருப்பதனால் சொன்னால் பலித்துவிடும். அதனால் அது வேண்டாம்" என்றார் காளிதாசர்.

இவர் இப்படிச் சொன்னவுடன் ராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது.

உடனே காளிதாசரை தேசப்பிரஷ்டம் பண்ணி விட்டார். அதாவது, நாடு கடத்தி விட்டார். ஏதோ அவசரத்தில் அப்படி செய்து விட்டாரே தவிர, ராஜா மிகவும் கவலைப்பட ஆரம்பித்தார். 'ஒரு நண்பர் என்னை விட்டுப் போய் விட்டாரே' என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார்.

சரி, அவர் எங்கிருந்தாலும் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என்று முடிவு செய்தார். ஒரு குடுகுடுப்புக்காரன் மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு அவரைத் தேடிப் புறப்பட்டார். ஊரூராக தேடி அலைந்தார். ஒரு ஊருக்கு வந்து சேர்ந்தார்.

அங்கே ஒரு இறைச்சிக்கடை இருந்தது. அதற்கு முன்னால் ஒரு சந்தியாசி நின்று கொண்டிருந்தார். அவர் விளையாட்டாக 'கறி என்ன விலை' என்று அந்தக் கடைக்காரரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். அதை போஜராஜா பார்த்தார். அந்த சந்நியாசி வேறு யாருமல்ல. அதுதான் காளிதாசர் என்பதை அடையாளம் கண்டு .கொண்டார். ஆனாலும் காளிதாசருக்கு ராஜாவை அடையாளம் தெரியவில்லை. இவர்தான் குடுகுடுப்புக்காரன் வேஷத்தில் இருக்கிறாரே!

ராஜா அவரைப் பார்த்து, "ஏன் சுவாமி, காவித்துணி கட்டிக் கொண்டு கறிவிலை கேட்கிறீர்களே இது நியாயமா?" என்று கேட்டார்.

இதற்கு அவர் "நான் எப்பொழுதும் மாமிசம் சாப்பிடுவதில்லை மது அருந்தும் சமயங்களில் சாப்பிடுவேன்" என்றார்.

இவர் அதிர்ச்சியாகிவிட்டார்.

"ஏன் இப்படி அசந்து போய் நிற்கிறீர்கள்? உங்கள் ஊரில் இதெல்லாம் கிடையாதா? நீங்கள் எந்த ஊர் என்று கேட்டார்.

"நான் தாரா நகரம் என்றார் ராஜா. உடனே சந்நியாசி வேடத்திலிருந்த காளிதாசர்,

"தாரா நகரமா? அங்கே உள்ள போஜராஜா எனக்கு மிகவும் நெருக்கமானவர். அவர் எப்படி இருக்கிறார்?" என்று விசாரித்தார்.

"நேற்றுத்தான் அவர் இறந்து போனார்" என்றார் ராஜா. காளிதாசர் அதிர்ச்சியாகிவிட்டார். கண்களில் கண்ணீர். உடனே 'தாரா நிராதாரா...' என்று ஆரம்பித்து ஒரு சுலோகம் பாடினார்.

"சரஸ்வதிக்குப் பற்றுக்கோடு இல்லாமல் போய்விட்டது. என்னை மாதிரியான புலவர்கள் இனி கண்டிக்கப்படுவார்கள். போஜராஜா! நீ மோட்சலோகம் போய்விட்டாயே" என்ற அர்த்தத்தில் காளிதாசர் இரங்கற்பா பாடினார்.

அவ்வளவுதான் போஜராஜா பொத்தென்று கீழே விழுந்து இறந்து விட்டார். அதற்குப் பின்னர்தான் காளிதாசருக்கு விடயம் புரிந்தது. உடனே "என் நண்பருக்கு உயிர்ப்பிச்சைகொடு" என்று சரஸ்வதியிடம் வேண்டினார்.

உடனே சரஸ்வதிதேவி காட்சி கொடுத்தார்.

"அவரைப் பிழைக்க வைக்கிறேன். ஆனால் முழு ஆயுளையும் தரமுடியாது. ஏழரை நாழிகைக்கு (3 மணித்தியாலம்) ஆயுள் தருகிறேன். அதன்பின் மறுபடியும் இறந்து விடுவார்" என்றார்.

போஜராஜா உயிர் பிழைத்து எழுந்தார். ஏழரை நாழிகைதான் ஆயுள் என்று தெரிந்ததும் ஒரு விநாடி கூட வீணாக்கக் கூடாது என்று முடிவு செய்தார். காளிதாசரை பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார்.

"நானும் நீயும் சேர்ந்து இராமாயணம் பாடலாம்" என்றார். இரண்டு பேரும் மாறிமாறி ஏழரை நாழியில் இராமாயணம் முழுவதையும் பாடி முடித்தனர். அதற்கு போஜசம்பு என்று பெயர்.

போஜராஜாதான் ஏழரை நாழியில் இறந்து விட்டார். போஜசம்பு இறைக்கவில்லை. அதுநிலைத்துவிட்டது.

எதற்கு இந்தக் கதையைச் சொல்ல வந்தேன் என்றால் அந்தக் காலத்தில் எழுதியவர்கள் இறந்து விடுவார்கள். அவர்கள் எழுதி வைத்தது அழிவதில்லை. இந்தக் காலத்திலெல்லாம் எழுத்துக்கு ஆயுள் குறைவு. எழுதுபவர்களுக்கு அந்தப் பிரச்சினையில்லை.

நான் இந்தக் காலத்து எழுத்தாளரைப் பார்த்து சும்மா விளையாட்டுக்காக ஒரு கேள்வி கேட்டேன்.

"போஜராஜனுக்கு வந்த நிலைமை உங்களுக்கு வந்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டேன். அதாவது 'ஏழரை நாழிதான் இருக்கப் போகிறீர்கள்' என்று சொன்னதும் அவர் இராமாயணம் எழுதினார். நீங்களாக இருந்தால் என்ன எழுதுவீர்கள்? என்று கேட்டேன்.

இதற்கு அவர், "உயில் எழுதுவேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரச அதிகாரிகள் இரண்டு மொழிகளையும் அறிந்திருத்தல் மிகவும் அவசியமாகும்

## ஜனாதிபதி வலியுறுத்தல்



(கொழும்பு)

அரசாங்க அதிகாரிகள் இரண்டு மொழிகளையும் அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியமானதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் போதியளவு தேர்ச்சியுடன் இருக்க வேண்டியது இன்றியமையாததென அவர் சுட்டிக்காட்டிக் காட்டியுள்ளார்.

கிழக்கு மாகாண அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் அல்லது சிங்கள மொழித் தேர்ச்சி இல்லாத அரசாங்க உத்தியோகத்தர்களினால் பொதுமக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளை இனவாத அடிப்படையில் எவரும் நோக்கக் கூடாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு மொழிகளிலும் தேர்ச்சியுடைய அரசாங்க உத்தியோகத்தர்களை பணியில் அமர்த்துவதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் எனவும் இலங்கையில் இனப்பிரச்சினை என்று எதுவும் கிடையாது. ஒரே மாதிரியான மக்களே இங்கு வாழ்கின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனப் பரம்பலின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கக் காணிகளை அபகரிக்க எத்தனிப்போருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படக் கூடாது எனவும் அவ்வாறானவர்களை வெளியேற்றுமாறும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசாங்க காணிகளை அபகரிக்க முற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

06.10.2010
(புரட்டாதி 20, புதன்கிழமை)
சதுர்த்தசி பின்னிரவு 3.15 மணிவரை
பூரம் முற்பகல் 9.46 மணிவரை
இராகுகாலம் 12.02 - 1.32 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை
சஸ்திரகதமகாளயம் கேதாரேஸ்வர விரதம்

**மேடம்** புதிய தொழில் தொடங்க எடுத்த முயற்சி வெற்றிபெறும், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மாலை நேரம் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**இடபம்** வாகன யோகம் உருவாகும், வீட்டில் விருந்தினர் வருகை அதிகரிக்கும், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், சுபசெய்தி மனதைக் குளிர வைக்கும்.

**மிதுனம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு கிட்டும், இழுபறியாக இருந்த வழக்குகளில் வெற்றி கிட்டும், வருமானம் திருப்திதரும், சகோதரர் மூலம் அனுகூலம் கிடைக்கும்.

**கடகம்** நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, செய்தொழிலில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும்.

**சிங்கம்** நண்பர்கள் ஒளிவுமறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சிந்தனை அதிகமுண்டு.

**கன்னி** சுப விரயங்கள் அதிகரிக்கும், விருந்து விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள், பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் ஏற்படும்.

**துலாம்** நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொழில் முன்னேற்றகரமாக அமையும், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பயணங்களால் பலன் கிடைக்கும், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** சாமர்த்தியமான பேச்சுக்களால் சாதனை படைக்கும் நாள், அரைகுறையாக நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், கணவன் - மனைவியிடையே ஏற்பட்ட மனஸ்தாபனம் விலகும்.

**மகரம்** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கலாம்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், இல்லத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம்.

**மீனம்** சர்ச்சரவை விட்டு சாதித்துக்காட்டும் நாள், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

வளவன்

# விடுதிகள் இன்மையால் சுற்றுலாப்பயணிகள் சிரமம்

(கரவெட்டி)

தென்னிலங்கையிலிருந்து வரும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வடமராட்சி பிரதேசங்களில் விடுதிகள் இன்மையால் பலவித சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதன் காரணமாக அதிகமான பயணிகள் பொது இடங்களிலும் ஆலயங்களிலும் கைவிடப்பட்ட மண்டபங்களிலும் தங்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை வடமராட்சிக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகள் வல்வெட்டித் துறையிலுள்ள முக்கிய இடங்களைப் பார்வையிடுவதோடு நின்று விடாமல் பருத்தித்துறை கடற்கரைப் பகுதிகளுக்கும் வல்லிபுர ஆழ்வார் கோவில் மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்கரைப் பகுதிகளுக்கும் படையெடுக்கின்றமை குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-24)

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு

யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்

கி.மேகநாதன்-144, சு.ஆரபிராஜ்-143, தி. அலைமகள்-143 (100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் -06)

யா/கரணவாய் மகா வித்தியாலயம்

க.கோகுலதாஸ்-156, பி.திவ்வியன் -149. (ஸ்ரீ)

## சைவபரிபாலன சபை பரீட்சைகள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் தமிழ்மொழி, சைவ நெறி பாடங்களுக்கான பரீட்சை எதிர்வரும் 29 , 30 ஆம் திகதி வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகளுக்கு மாணவர்களுக்கான சுட்டிலக்கங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலை அதிபர்கள் , ஆசிரியர்கள் ஒத்துழைப்பை நல்குமாறு சைவ பரிபாலன சபை பரீட்சைச் செயலாளரான இரா.செல்வவடிவேல் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 50 |
| தக்காளி | 30 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 50 | 50 | 70 |
| கரட் | 50 | 70 | 40 |
| பூசணி | 40 | 40 | 35 |
| புடோல் | 30 | 20 | 30 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 50-70 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 50 | 80 |
| பாகற்காய் | 100 | -- | 90 |
| வெண்டிக்காய் | 50 | 30 | 50 |
| கருணைக் கிழங்கு | 50 | 40 | 60 |
| பயற்றங்காய் | 60 | 80 | 100 |
| லீக்ஸ் | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 30 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 150 |
| போஞ்சி | 100 | 80 | 130 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 10-20 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-40 | 40 |





உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை மக்களுக்கு பரப்புவதற்கான செயலமர்வு நேற்று உள்ளூராட்சி திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் வடமாகாண திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எம். துஷ்யந்தன் உரை நிகழ்த்துவதையும் ஜி.ரி-இசற் நிறுவனத்தின் ஆலோசகர் பெற்றர் நாவ்ரட் , வலிதெற்கு பிரதேச சபைசெயலாளர் திருமதி மு. சுலோச்சனா, ஜி.ரி-இசற் நிறுவன தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஞா.தங்கேஸ்வரன் மற்றும் வளவாளர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட உள்ளூராட்சி மன்ற மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## நவராத்திரி விரத பூசை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் நவராத்திரி விரத பூசை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் தினமும் அம்பாளுக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து விசேட பூசைகளும் மாலை 5 மணிக்கு நவராத்திரி கொலு பூசைகளும் நடைபெறவுள்ளன.

✦ ✦ ✦

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தினால் நவராத்திரி பூசையை முன்னிட்டு ஆன்மீக பிரார்த்தனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப்பூசை வழிபாடுகள் தொடர்ந்து 9 தினங்கள் இடம்பெறவுள்ளதாகவும் பக்தர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு மையத்தினர் அறிவித்துள்ளனர்.

✦ ✦ ✦

யாழ். சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நவராத்திரி பூசை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இறுதி நாளான எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி அன்று ஏடு தொடக்குதல் நிகழ்வும் இடம்பெறும். (ஸ்ரீ-4)




### வீட்டுக்கிணற்றிலிருந்து வயோதிப பெண்ணின் சடலம் மீட்பு

(கரவெட்டி)

துன்னாலை கோவிற் கடவைப் பகுதியிலுள்ள வீட்டுக் கிணற்றிலிருந்து வயோதிபப்பெண்ணின் ச்டலம் மீட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது , குறித்த பெண் அவரது வீட்டுக் கிணற்றில் தவறி விழுந்துள்ளதாகவும் நேற்றுக்காலை 7 மணிக்கு உறவினர்களின் உதவியுடன் நெல்லியடிப் பொலிஸாரினால் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த வல்லிபுரம் மகேஸ்வரி (வயது76) என்ற பெண்மணியே உயிரிழந்துள்ளார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொ்லிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-24)

## அங்கத்துவத்தை புதுப்பித்தல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையின் 2010 ஆம் ஆண்டிற்கான பொதுக் கூட்டம் இம்மாத இறுதியில் நடைபெற இருப்பதால் இவ்வாண்டுக்குரிய வருட சந்தாப்பணத்தைச் செலுத்தி தங்கள் அங்கத்துவத்தை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்பாக புதுப்பித்துக் கொள்ளுமாறு வலி.மேற்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## முன்பள்ளிகளுக்கான கண்காட்சியும் சிறுவர்களுக்கான கலை நிகழ்வும்

வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளை அபிவிருத்தி பிரிவினால், மாகாணமட்டத்தில் முன்பள்ளிகளுக்கான கண்காட்சியும் சிறுவர்களுக்கான கலைநிகழ் வும் எதிர்வரும் 9 , 10 ஆம் திகதிகளில் யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். சிறப்பு விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

இக்கண்காட்சியில் முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் முன்பள்ளிச் சிறுவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்படும். இது அவர்களின் கற்றல், கற்பித்தல் செற்பாடுகளுக்கு உதவும் வகையிலும் சிறுவர்களும் மற்றும் ஆசிரியர்களும் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலேயே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் , 12 வலயங்களில் இருந்தும் கலை நிகழ்ச்சிகள் கொண்டுவரப்படவுள்ளன. எனவே , அனைத்து முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் , மழலைச் செல்வங்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெயா தம்பையா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார 6 ஆம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார 6 ஆம் நாள் நிகழ்வுகள் இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி சாந்தி நிலையத்தில் இல்ல அத்தியட்சகர் என்.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி உதவிப்பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரட்ணம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக கைதடி சித்த மருத்துவத்துறையை சேர்ந்த திருமதி ரி.குமுதரஞ்சன், கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி திருமதி. பி.சிவசண்முகராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

தொடர்ந்து வரவேற்புரையை சாந்தி நிலைய பரிசாரகர் வை.இராசேஸ்வரன் வழங்கவுள்ளதுடன் துளிர்கள் உள சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஸ்ரீ-4)

## வடமாகாண பாடசாலை அபிவிருத்தி திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(அல்வாய்)

வடமாகாண பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடமராட்சி வலயத்தில் யாழ். விக்னேஸ்வரா கல்லூரி, யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்.வட இந்து மகளிர் கல்லூரி, யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்.ஹாட்லி கல்லூரி, உடுத்துறை மகாவித்தியாலயம் மற்றும் செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை ஆகியன வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளரால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப கலந்துரையாடல் வவுனியா வடக்கு மாகாண கல்வி அலுவலகத்தால் எதிர்வரும் 10, 11 ஆம் திகதிகளில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு சகல வலயக் கல்விப்பணிப்பாளர்களும், திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களும் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களும் சமூகமளிக்க வேண்டுமென வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-2-19)

## ஒப்பந்தகாரர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை வேலைப்பகுதி ஒப்பந்தகாரர்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பாடசாலை வேலைப் பொறியியலாளரினால் ஐந்து வலயங்களிலும் நடைபெறும் உட்கட்டுமான வேலை சம்பந்தமான சமர்ப்பிப்பு நடைபெறவுள்ளதால் பாடசாலை வேலைப் பரிசோதகர்களும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் கட்டாயமாகப் பங்கு பற்ற வேண்டும் எனவும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் வேலைத் திட்டங்கள் நடைபெறும் பாடசாலை அதிபர்களும் இதில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## ஆசிரியர் தின விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆசிரியர் தின விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் காலை 8.30 மணிக்கு மாணவர்கள் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் பகல் 12 மணிக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளதுதாக சங்க செயலாளர் க.விஜயவாசன் தெரிவித்தார். (ஸ்ரீ-4-29)

✦ ✦ ✦

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரியர் தின விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தனராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபை செயலாளர் ரி. நடராசா கலந்து கொள்வார்.

தொடர்ந்து விரிவுரையாளர்கள் முகிழ் நிலை ஆசிரியர்களால் கௌரவிக்கப்படுவதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

✦ ✦ ✦

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் ஆசிரியர்தின விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் உயர்தர மாணவர் மன்ற தலைவர் செல்வன் தே.கெனிஸ்ரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை கலந்து சிறப்பிப்பார். (ஸ்ரீ-4)

✦ ✦ ✦

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் சிரேஷ்ட மாணவ தலைவன் செல்வன் ம.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.




இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ஆசிரியர்களின் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் மாணவர்களை வழிப்படுத்துவதில் பெரிதும் பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களா? பெற்றோர்களா? என்னும் விடயம் பற்றிய சிறப்பு பட்டி மன்றமும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-4-136)

## மாணவர் விடுதி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவர் விடுதி திறப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-4)

முல்லைத்தீவு விஸ்வமடு மகாவித்தியாலயம் கடந்த 27ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு கற்பித்தல் செயல்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் முன்னாள் முல்லைத்தீவு வலயக்கல்விப்பணிப்பாளர் மா.தேவேந்திரன் பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டு பாடசாலை பதிவேட்டில் கையெழுத்திடுவதையும் அருகில் பதில் அதிபர் திருமதி வீரசிங்கம் தெய்வநாயகி அமர்ந்திருப்பதையும் மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதையும் பாடசாலை ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# தமிழீழ விடுதலைப்புலிச் சந்தேக நபரின் தாய்க்கும் சகோதரிக்கும் விளக்கமறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபரின் தாய் மற்றும் சகோதரியை தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார். குறித்த தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபர் ஓர் தற்கொலை குண்டுதாரி எனவும் அவர் கைது செய்யப் பட்ட போது உயிரை மாய்த்துக் கொண்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலை செய்துகொண்ட குறித்த நபரின் சகோதரி மற்றும் தாய் ஆகியோரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு துணை நின்றதாக குற்றம் சுமத்தப்பட்டு குறித்த இரண்டு பெண்களிடமும் பொலிஸார் தகவல் களை திரட்டியுள்ளனர். தாமோதரம்பிள்ளை சுதர் சினி மற்றும் தாமோதரம்பிள்ளை ஜெக யோதி ஆகியோரே இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளனர்.

கடந்த 2007ஆம் ஆண்டில் குறித்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் கொழும்பு தொடர் மாடிக்கட்டடம் ஒன்றில் இருந்து பாய்ந்து தமது உயிரை மாய்த்துக்கொண் டார் என்பது குறிப்பிடத்தக்கது. சட்டமா அதி பரின் ஆலோசனைக்கு அமைவாக எதிர் கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்; காற்றின் வேகம் அதிகரிப்பு

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற் பட்டுள்ளதாகவும் இதனால் இலங்கையின் மேற்கு, தெற்கு கடற்பரப்பில் காற்றின் வேகம் அதிகரிக்கும் என வானிலை அவ தான நிலையம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவின் கிழக்கு பகுதியில் தாழமுக்கம் உருவாகி இருப்பதாகவும் இது திருகோணமலையிலிருந்து 800 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளது எனவும் வானிலை அவதான நிலையத்தின் வானி லைப் பொறுப்பாளர் ஜயசிங்க ஆராய்ச்சி தெரிவித்தார்.

இதன் காரணமாக இடைப்பருவ பெயர்ச்சி மழை வீழ்ச்சி தாமதமடைந்திருப் பதாகவும் அவர் குறிப்பிட்டார். வங்காள விரி குடாவில் கடந்த 3ஆம் திகதி தாழமுக்கம் உருவாகியுள்ளது.

இதனால் இலங்கை ஊடாக வீசிய காற் றின் திசை தற்போது திடீரென மாற்ற மடைந் துள்ளது.

தற்போது மேல் மற்றும் வடமேல் திசை களின் ஊடாக வீசும் காற்று மணித்தியால யத்திற்கு 5-10 கிலோ மீற்றர் வேகத்தி லிருந்து 20-40 கிலோ மீற்றர் வரை அதி கரித்துள்ளது.

இதன் விளைவாக மேல், தென் கடற்பரப் புக்கள் கொந்தளிக்க முடியும். இக் கடற்பரப் பில் காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 50-60 கிலோ மீற்றர்கள் வரை காணப்படும் என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)




# தொண்டர் ஆசிரியர்களாகிய எமது வாழ்விலும் ஒளியேற்றப்படுமா?


யாழ். மாவட்ட அரசாங்கப் பாடசாலைகளில் கடந்த பல வருடங்களாக பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியிலும் வேதனமின்றி சேவையாற்றி வந்த தொண்டர் ஆசிரியர்கள் கடந்த 11.11.2009அன்று வடமாகாண கல்வி அமைச் சினால் ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டனர். ஆனாலும் இவ் ஆசிரியர் உதவியாளர்கள் நியமனத்தில் மிகவும் வேதனைக்குரிய விடயம் என்ன வென்றால், குறிப்பிட்ட 52 தொண்டர் ஆசிரியர்களாகிய நாம் இந் நியமனத் தில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளோம்.

குறிப்பிட்ட 3 வருட தொடச்சியான சேவை மற்றும் தேவையான கல்வித் தகுதியைக்கொண்டிருந்தும் 2002ஆம் ஆண்டில் இருந்து சேவையில் இல்லாத ஒரேயொரு காரணத்தினால் நாம் புறக்கணிக்கப்பட்டிருப்பது எமக்கு மிகுந்த வேதனையையும் மன உளைச்சலையும் தருகின்றது.

ஆனாலும் இவ் ஆசிரிய உதவியாளர் நியமனத்தில் வேறு துறைசார்ந் தவர்களுக்கு சேவைக்காலம் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த 2007,2009ஆம் ஆண்டுகளில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியும் இதுவரை எமக்கு நியமனம் வழங்கப்படாத நிலையில் கடந்த வருடம் ஆசிரிய உதவியாளராக நியமனம் பெற்றோர் ஆசிரியப் பயிற்சிக்காக ஒரு சில நாட்க ளுக்கு முன்னர் உள்வாங்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட விரும்புகிறோம். எனவே இவ் ஆசிரிய உதவியாளர் நியமன வழங்களில் பாதிக்கப்பட்ட தொண் டர் ஆசிரியர்களாகிய எமக்கும் நியமனம் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரி கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்,**
**பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம்,**
**யாழ்.மாவட்டம்.**




யாழ். கல்வி வலய முறைசாரக் கல்விப்பிரினால் பாடசாலை கல்வியை முடித்துவிட்டு வேலையற்றிருக்கும் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வு நேற்று யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலய முறைசார கல்விப்பிரிவின் உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.இராசநாயகம் உரையாற்றுவதையும் அருகில் யாழ்.கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வித்தியாலய அதிபர் வே.ஞானகாந்தன், தொழில்நுட்பக் கல்லூரியின் திறன் அபிவிருத்தி உதவியாளர் ரி.நிலாபரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என் குமார்)

# ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க விரைவான நடவடிக்கை எடுப்போம்



## ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தியில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் உறுதி

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு மாடல்ல மற்றயவை"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய அழிவற்ற நிலை யான கல்விச் செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் ஆசிரியர் களை உலகளாவிய நிலையில் கௌரவித்துச் சிறப்பிக்கும் இன்றைய நன்னாளில் வடமாகாண கல்விச் சமூகத்தின் சார்பில் எமது ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். புனிதமான ஆசிரியப் பணியைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். உங்களுக்கு ஆண்டவன் வழங்கிய இப்பணி புனிதமானது. இப்பணி மூலம் அர்ப்பணிப்பான சேவையை எமது மாணவச் செல்வங்களுக்கு வழங்கி அவர்களை எல்லா அம்சங்களிலும் மேம்பாடடையச் செய்யுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் மிகக்குறைந்த ஊதியத்துடன் சிறப்பாகப் பணிபுரிவது யாவரும் அறிந்ததே. அவர்களையும் இன்றைய நன்னாளில் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களது எதிர்காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பல்வேறு வகையிலும் இன்று ஆசிரியர்களுக்கு பல கஷ்டங்கள் உண்டு என்பதை நாம் அறிவோம். அவர்களுக்கான பிரயாணக்கஷ்டம், தங்குமிட வசதியின்மை, இழந்த கோவைகளைப் புதிதாக அமைத்தல், ஆசிரிய உதவியாளருக்கான குறைந்த ஊதியம், சம்பள நிலுவை ஆகியன பிரதானமானவைகளாகும். இவற்றை தீர்மானிப்பதற்கான அனைத்து அணுகுமுறைகளையும் நாம் விரைவாக எடுக்க முனைகின்றோம். வன்னிப் பெருநிலப்பரப்பில் மீள் குடியேறிய ஆசிரியப் பெருமக்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் புன் சிரிப்புடன் அர்ப்பணிப்பான சேவை புரிகின்றனர். தமது பாடசாலைகளை மீளவும் உயர் நிலைக்கு கொண்டு வருவதிலும் சமூகத்தினை பாடசாலை வளர்ச்சியில் ஈடுபடுத்துவதிலும் கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றன. அவர்களுக்கு இன்றைய நாளில் விசேடமான பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது கல்வி செயற்பாடுகளை ஊடகத்தின் ஊடாக சமூகத்திற்கு கொண்டு செல்வதில் அளப்பெரும் பணிபுரியும் வலம்புரி நாளிதழ் ஊடாக எமது ஆசிரியர்களை இன்றைய நாளில் வாழ்த்து வதுடன் அவர்களுக்கு எல்லாச் சிறப்புகளும் கிடைக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

*பி.விக்னேஸ்வரன்*
*மாகாணக்கல்விப் பணிப்பாளர், வடமாகணம்*

# எத்தனை இடர்களை சந்தித்த போதும் தளராது பணியாற்றியவர்கள் ஆசிரியர்கள்

## ஆசிரிய தின செய்தியில் சிறிதரன் எம்.பி.பாராட்டு



இன்று உலக ஆசிரியர் தினம். ஆசிரியத்துவம் என்னும் புனித பணியில் உங்களையும் இணைத்துக் கொண்டு எமது தமிழ் சமூகத்தின் வலிமையான இருப்பிற்காகவும் அதன் நிலைபேற்றிற்காகவும் உழைத்து வரும் உங்களை இன்றைய நன்நாளில் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

பாரம்பரியமும் செழுமையும் மேலோங்கிய தமிழ் சமூகத்தின் அடித்தளமாகிய அறிவையும் அறிவு சார் பண்பாட்டையும் பற்றுறுதியோடு சந்ததிக்கு கையளிக்கின்ற உன்னத சேவையின் முதன்மையாளர்கள் நீங்கள். எமது நிலத்தில் எங்கள் குழந்தைகள் அச்சமின்றிய எதிர்காலத்தை எதிர்கொள்ளவும் சவால்களைச் சந்திக்கும் மனப்பாங்கு, தைரியம் என்பவற்றை அடையவும் மாத்திரமன்றி தம்மைத்தாமே நிர்ணயிக்கக்கூடிய தலைமைத்துவ உணர்வு படைத்தவர்களாகவும் எமது சமூகத்தை வடிவமைக்கும் பொறுப்பும் கடமையும் தங்களைச் சார்ந்து நிற்கிறது.

விரிந்து செல்லும் உலக முன்னேற்றங்களுக்கேற்ப எமது சமூகத்தின் இயங்கியலில் கல்வியியல் வகிக்கின்ற அதி உயர் பங்கை உணர்ந்தவர்களாக புதிய சிந்தனைகளோடும் நுட்பங்களோடும் தங்கள் பணி தொடர வேண்டும் என்பதே எமது விருப்பாகும்.

உங்களுடைய சேவைக்காலத்தில் உங்களோடு சேர்ந்து பணியாற்றிய சக ஆசிரியர்கள் பலர் இன்று உயிரோடு இல்லை. நீங்கள் அரிச்சுவடியூட்டிய குழந்தைகளும் உயிரோடு இல்லை. நீங்கள் நேசித்த உறவுகள் இல்லையென்றான போதும் நீங்கள் தொடர்கின்ற பணி அற்புதமானது. முள்ளிவாய்க்காலிலும் முட்கம்பி வேலிகளுக்குள்ளும் அவலமே வாழ்வாகிப் போன போது காலப்பணி புரிந்து ஆசிரியத்துவத்திற்கு அழகு சேர்த்தீர்கள். விசேடமாக தொண்டு அடிப்படையில் தொண்டர் ஆசிரியர்களாக நீண்ட காலமாக அரும்பணியாற்றுகின்ற உங்களிற்கு எமது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரசாங்கத்தின் பாராமுகத்திற்குள்ளாகி வெற்று உறுதி மொழிகளால் அலைக்கழிக்கப்படுகின்றபோதும் தாங்கள் சார்ந்த சமூகத்தின் எதிர்காலத்திற்காய் நீங்கள் புரியும் ஊழியம் வீண் போகாதிருக்க பிரார்த்திக்கின்றேன். எத்தனை இடர்களையும் சவால்களையும் சந்தித்த போதும் அறிவுத்தளர்ச்சியோ ஆளுமைத்தளர்வோ இன்றி பணியாற்றிய எல்லோரையும் பாராட்டுவதுடன் அறிவு விருத்தியோடு தொழில் சார் தகைமைகளையும் அபிவிருத்தி செய்து எமது தாய்த் தமிழ்த் தேசத்திற்கு பரிபூரண பணியாற்ற வாழ்த்துகிறோம்.

*சிவஞானம் சிறீதரன்*
*நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.*

# மாணவர் சமுதாயத்தின் எதிர்கால வாழ்வு ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது

இன்று ஒக்டோபர் ஆறாம் நாள். இலங்கையிலே ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்ற பொன்னான நாள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னால் உருவாக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு பட்டங்களை வழங்கி அவர்களை அங்கீகரிக்கின்ற உன்னதநாள். ஆசிரியர்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, சமுதாயத்திற்காய் ஆற்றுகின்ற பணி என்பவற்றிக்காய் நன்றி செலுத்திக் கௌரவிப்பதற்காய் விழா எடுக்கும் நாள்.

இறைவன் நம் கண்முன்னே நடமாடுவது தாயாக. எதிர்காலத்தில் நாம் நற்பிரஜைகளாக விளங்கவேண்டும் என்ற நன்னோக்கத்திற்காக குரு (ஆசிரியர்) விடம் சேர்ப்பிப்பவர் தந்தை. (இக்காலத்தில் தாய்க்கும் இதே வகிபாகம் இருக்கிறது). வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்குபவர் குரு. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒழுங்கில் குரு தெய்வத்திற்கும் மேலாகக் கருதப்படுகிறார். இன்றைய கல்விமுறையில் குரு எனும் பதம் ஆசிரியர் என்றே அதிகம் பாவிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாசிரியர்களுக்கு இன்று விழா எடுக்கப்படுகின்றது. அவர்களைப் பாராட்டி வாழ்த்துதல் யாபேரதும் கடமையாகும்.

இன்றைய காலகட்டத்திலே, இவ் ஆசிரியர்களிடம் எமது சமுதாயம் அதிகம் எதிர்பார்ப்பதும் தவிர்க்கமுடியாததாகும். தற்பொழுது எந்த ஊடகத்தைப்பார்த்தாலும் கலாசாரச் சீரழிவு, சமூகச்சீரழிவு, இளம்சமுதாயம் பாதை மாறிச் செல்கிறது என எம்தமிழ்ச் சமூகத்தின் வயிற்றில் புளியைக்கரைப்பதாகவே உள்ளது.

எமது மனிதவளம் சிதைவுறுகிறது. கலாசாரத்திற்கும் பண்பாட்டிற்கும் பேர் போன யாழ்ப்பாணம், இன்னு[illegible] வருடங்களில் அப்படியென்றால் என்[illegible] என்று கேட்கக் கூடுமோ என்ற பயமே [illegible]லோர் மனதிலும் உள்ளது. இவர்களுக்கு ந[illegible]லதோர் குருவாக நம் ஆசிரியர்கள் நின்று வழிகாட்டமாட்டார்களா என்ற ஆதங்கம் ஆசிரியர்களிடம் ஒரு வரலாற்றுச் சுமையை திணிப்பதனைத் தவிர்க்க முடியாது. எங்களிடம் மட்டுமேன் இச்சுமையைச் சுமத்துகிறீர்கள். மற்றவர்கள் இல்லையா எனக் கேட்பதனை உணரமுடிகிறது.

என்ன செய்வது... உங்களாலேயே முடியும்... உங்களால் மட்டுந்தான் முடியும். வருங்காலத் தலைவர்களான இளைய சமுதாயம் உங்கள் கைகளிற்தான் தங்கியிருக்கிறது. மாணவர்கள் பச்சைக்களிமண் போன்றவர்கள். நாம் எத்தகைய உருவம் செய்கிறோமோ அப்படியே வருவார்கள். இவ் உருவம் செய்பவரின் திறமையைப் பொறுத்தது. எம் எதிர்கால சமுதாயத்தை நல்லதோர் சிலையாக வடித்துத் தாருங்கள். எமது வரலாற்றில் உங்கள் பெயர் பொன் னெழுத்துக்களால் பொறிக்கப்படும்.

எமது கல்வியைப் பரீட்சை நோக்கிலும் அடைவு மட்ட ரீதியிலுமே நோக்குவது துரதிஷ்டமானதே. ஆசிரியர்களும் அத்தகைய எதிர்பார்ப்பிற்கேற்ப கற்பிற்பது தவிர்க்க முடியாதது. அவர்களிற் தவறில்லை. கற்றல் என்பது

## இன்று ஆசிரியர் தினமாகும்

அறிவு, ஆற்றல் என்பவற்றைக் கற்றுக் கொள்வதோடு நற்பழக்கவழக்கங்களையும் சமூக விழுமியங்களைப் பேணுமாற்றலையும் உணர்விலே ஊறவைக்க வேண்டும். இதில் முன்பள்ளி மற்றும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் மிக அதிக பொறுப்பு ஏற்கவேண்டியது தவிர்க்க முடியாதது. அவர்கள் அப்பொறுப்பைத் திறம்படச் செய்வார்களென்றே நம்புகிறேன். சிறுவயது முதலே மாணவர்கள் பொறுப்புணர்வு உள்ளவர்களாகவும் சமூக அக்கறை உள்ளவர்களாகவும் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். இன்று பெரும்பாலான அரச நிறுவனங்களில் காணப்படுகின்ற குறைபாடு, அக்கறையின்மையும் சமூகப் பொறுப்புணர்வின்மையும் ஆகும்.


சிலர் மிகச்சிறப்பாகத் தொழிற்படுவதைப் பாராட்டியே ஆகவேண்டும். அரசதொழில் கிடைத்து விட்டால் எனது ஆணிவேர் மிக ஆழமாக ஊன்றிவிட்டது, என்னை யாருமே ஒன்றும் செய்யமுடியாது, அசைக்கவே முடியாது, வேலை செய்தாலென்ன செய்யா விட்டாலென்ன கையெழுத்து வைத்தால் சம்பளம் தரத்தானே வேண்டும்; எப்படியும் வருடாந்த சம்பள உயர்வு வரும்தானே என்ற மனோநிலையே காரணம். இந்த வேலையை செய்வதாலேயே எனக்கு சமூகத்தில் ஒரு மதிப்பிருக்கிறது, இல்லையேல் குடும்பமே மதிக்காது. இந்தச் சம்பளத்திலேயே உண்டு உயிர் வாழ்கிறேன்; உடுத்து மானத்தைக் காக்கிறேன் என்ற எண்ணம் எந்த நேரமும் இருக்க வேண்டும். எடுக்கும் சம்பளத்திறகு மேலாக வேலை செய்யும் ஒரு சிலருக்குத் தலை வணங்குகிறேன். வேலை செய்யாதவனுக்கு வேலைபோகும் என்ற நிலை இல்லாதது துர்ப்பாக்கியமே.

நல்ல கௌரவமான பூரண மனிதனாக வாழ்ந்தான் என்று கூறவேண்டுமாயின் தொழில், குடும்பம், சமுதாயம் என்பவற்றில் சம அக்கறை காட்டவேண்டும். ஒன்றிலே கூடி இன்னொன்றில் குறையக்கூடாது. இம்மனப்பாங்கு பாடசாலை மட்டத்திலிருந்தே வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். கட்டிளம் பருவத்தினரைக் கட்டியவிழ்ப்பதென்பது ஒரு கலை. அது கம்பிமேல் நடக்கின்ற பருவம். சிறிது சமநிலை தப்பினாலும் வீழ்ந்து விடுவார்கள்.

உடலிலும் மனதிலும் ஏற்படும் மாற்றங்களுக்குக் காரணம் ஹோமோன்களே. காஞ்சோண்டி உடலில் பட்டால் சுணைக்கத்தான் செய்யும். அதனைப் புரிந்துகொண்டு அணைத்துச் செல்லவேண்டும். அவர்கள் போக்கிலேயே போய் அவர்களை வழிநடத்த வேண்டும். தற்போதைய காலமாற்றம், வாழ்க்கைமுறை மாற்றம் என்பவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். "அந்தக் காலத்தில் நாங்கள் இப்படியோ? இந்தக் காலத்துப் பெடி பெட்டையள் சரியான மோசம்" என்று புலம்புவதை விடுத்து, இந்தக்காலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். சில ஆசிரியர்கள் மாணவர்களை நண்பர்களாகப் பாவித்து வழிநடாத்துவதைக் கண்டிருக்கிறேன். அவர்கள் பாராட்டிற்குரியவர்கள். சில தவறுகளை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி அவர்கள் மனதை நோகடிப்பதை விடுத்து, நாசூக்காகத் திருத்த முனையவேணடும்.

அப்பொழுது ஆசிரியர் மீது மதிப்பும் அன்பும் கூடும். மிக மிக வேதனையான செய்தி, மாணவர்கள் பாடசாலைக்கு மாற்றுடையும் கொண்டு வந்து இடைநேரத்தில் வெளியே செல்கிறார்கள். பின் அவர்கள் ஈடுபடும் செயல்களைக் கேள்விப்படும்போது மிகவும் வேதனையாகவுள்ளது. மாணவர்கள் பாடசாலையிலேயே இருக்கிறார்கள் என்றே பெற்றோர்கள் நினைக்கின்றனர். எனவே ஆசிரியர்கள் பொறுப்புக் கூறவேண்டியது தவிர்க்க முடியாது. இதற்கு ஒரு காத்திரமான நடவடிக்கை உடனடியாக எடுத்தேயாகவேண் டும்.

மாணவர் மட்டத்தில் எடுக்க முடிந்தால் மிகவும் நல்லது. முடியாவிட்டால் பெற்றோரின் துணையை நாடியே ஆகவேண்டும். ஒரு நாள் வரவில்லையெனினும் அக்கறை கொண்டு விசாரிக்கவேண்டும். முழுப்பாட



வேளையும் ஏதோவொரு ஆசிரியர் வகுப்பில் இருந்தேயாகவேண்டும். பெரும்பாலும் பாடங்களில் அக்கறை குறைந்த மாணவர்களே இவ்வாறு பாதை தவறுகின்றனர்.

எனவே, பாடங்கள் மாணவரைக் கவரக் கூடிய விதத்தில் நடாத்தப்படவேண்டும். மேலும், விளையாட்டுகள், கலை நிகழ்வுகள், மன்ற நடவடிக்கைகள் போன்றவற்றிலே மாணவர்களை ஈடுபடுத்தப்பட வேண்டும். அவர்கள் எந்த வேளையும் பாடசாலையில் தொழிற்படு நிலையில் இருக்கவேண்டும். அவர்கள் முன் நல்ல பல சவால்கள் வைக் கப்பட வேண்டும். நல்ல செயற்பாடுகளிற்கு அவர்களை மனம்விட்டுப் பாராட்டவேண்டும். சொல்வது சுலபம் ஆனால் செயற்படுவது கடினம்.

**வைத்திய கலாநிதி எஸ்.கண்ணதாசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

ஆனாலும் எமது ஆசிரியர்கள் திறமை மிக்கவர்கள், அர்ப்பணிப்புள்ளவர்கள். நிச்சயம் அவர்களால் முடியும். அவர்களை நம்பியே எமது தமிழ்ச் சமுதாயமே உள்ளது. முடிவாக, ஆசிரியர்களாகிய நாம் "நல்லதோர் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடுவோம்" என்றும் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக அக்கறையுள்ள அனைவரும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்றும் இன்றைய ஆசிரியர் தினத்திலே உறுதி பூணுவோமாக.

# புலிகளுக்கு ஆதரவாக குறுந்தகவல் அனுப்பிய பெண் கிளிநொச்சியில் கைது

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதர வான வகையில் குறுந்தகவல்களை அனுப் பிய பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கிளிநொச்சி பிரசேத்தில் வைத்து குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளதாக சிங்கள ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப்புலி செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு குறித்த பெண் முனைப்புக் காட்டியதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

மாவீரர் தினத்தை அனுஷ்டிக்குமாறு கோரி குறித்த பெண் குறுந்தகவல்களை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள நிறுவன மொன்றில் குறித்த பெண் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிடப் படுகிறது. (ஸ்ரீ-2)

# வெளிவாரி பட்டதாரிகளுக்கும் வெட்டுப்புள்ளிகள் அறிமுகம்

வெளிவாரிப் பட்டதாரி பாடநெறிகளின் தன்மையை மேம்படுத்துவதற்காக பல் கலைக்கழகங்களுக்கான விசேட சுற்று நிருபங்கள் இந்த மாதயிறுதியில் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்தத் தகவலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் காமினி நவரட்ண வெளியிட்டுள்ளார்.

உள்ளக பட்டதாரி பாடத்திட்டங்களைப் போன்றே வெளிவாரி பாடத்திட்டங்களையும் ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழேயே மேற்கொள்வது இதன் நோக்க மாகும்.

அதேவேளை வெளிவாரி பட்டதாரி பாட நெறிக்காக மாணவர்களைத் தெரிவு செய் வதற்கான வெட்டுப் புள்ளிகளையும் அறி முகம் செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் இலங்கையின் ஐந்து பல்கலைக்கழகங்கள் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்படவுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்துள்ளார்.

இதணடிப்படையில் பெரதெனியா, மொறட் டுவ, கொழும்பு, சிறிஜயவர்தனபுர மற்றும் களனி ஆகிய பல்கலைக்கழகங்களே இவ் வாறு தரமுயர்த்தப்படவுள்ளன. (ஸ்ரீ-2)



மகாஜனாக் கல்லூரியின் ஓய்வுபெற்ற பிரதி அதிபரான செ.இராசகுலேந்திரன் தனது மனைவியின் நினைவாக மகாஜனாக்கல்லூரி மாணவி ஒருவருக்கு கொடுப்பதற்காக துவிச்சக்கரவண்டியொன்றை கல்லூரி அதிபரிடம் கையளிப்பதை படத்தில் காணலாம். (படம் - பாலமுரளி)

# சிறையில் அடைப்பதன் மூலம் எனது பயணத்தை தடுக்க முடியாது

## சரத்பொன்சேகா தெரிவிப்பு



நாட்டுக்காக உயிரையும் கொடுப்பேன். சிறை வைத்து எனது பயணத்தை தடுக்க முடியாது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத் தினால் 30 மாத சிறைத் தண்டனை விதிக்கப் பட்ட நிலையில் வெலிக்கடை சிறைச்சாலை யில் தண்டனை அனுபவித்துவரும் பொன் சேகா வெள்ளைக்கொடி விவகார வழக்கில் ஆஜர்படுத்தப்படுத்தப்படுவதற்காக நேற்று முன்தினம் மேல் நீதிமன்றத்திற்கு சிறைக் காவலர்களினால் அழைத்து வரப்பட்டார்.

நீதிமன்ற வாசலில் காத்திருந்த ஊடக வியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கை யிலேயே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து வான் ஒன்றில் இவர் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டார். இவர் அழைத்து வரப்பட்ட நேரத்தில் நீதிமன்றத்திற்கு முன்பாக ஒன்று கூடியிருந்த ஜனநாயக தேசியக் கூட்டணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்ட பேரணியில் ஈடுபட்டிருந்தனர். இவரது வானை வழிமறித்த அவர்கள் சரத்பொன்சேகாவை விடுவிக்கு மாறு கோஷம் எழுப்பினர்.

இதனையடுத்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு சரத்பொன்சேகா அழை த்து வரப்பட்ட வான் நீதிமன்றத்திற்குள் கொண்டு செல்லப்பட்டது.

நீதிமன்ற வாசலில் காத்திருந்த ஊடக வியலாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் நண்பர்களுக்கு கையை அசைத்த சரத் பொன்சேகா நாட்டுக்காக உயிரையும் கொடுப்பேன்.

சிறை வைத்து எனது பயணத்தை தடுக்க முடியாது என தெரிவித்துவிட்டு நீதிமன்றத் திற்குள் சென்றார். (ஸ்ரீ-2)

# தாதியர் சட்ட மூல திருத்தம் சர்ச்சையில்

தாதியர் சட்டமூல திருத்தத்தை அரச மருத்துவ உத்தியோகத்தர்களின் சங்கம் ஆட்சேபிப்பது தாதியர் சேவையை வீழ்ச்சி பெறச் செய்யும் நோக்கிலேயே என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அரச தாதியர் சங்க பிரசார செயலாளர் ஜயந்த விமலசிறி இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

சட்டமூலத்திருத்தத்தை தடுப்பதற்கு முற்பட்டால் மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்திற்கு எதிராக தொழிற்சங்க நட வடிக்கையில் ஈடுபடப்போவதாக அவர் எச்சரித்துள்ளார்.

இந்த விடயம் குறித்த மருத்துவ உத்தியோகத்தர் சங்கத்தின் உபதலைவர் அனுருத்த பாதெனியகே தெரிவிக்கையில், அந்த சட்ட மூலத்தில் என்னென்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்து ஏனைய உத்தியோகத்தர் களுக்குத் தெரியாது.

தாம் அதனை முறியடிப்பதற்கு முற் படவில்லை என தெரிவித்த அவர் தாதியர் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் இரகசிய தன் மையை கடைப்பிடிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### வலம்புரிக்காய் அல்லது திருகுபவை

Botanical Name - Helecteres isora

Family - Sterculiaceae

Engl - East Indian Screw tree

Sinh - Liniya

பெருஞ்செடி அல்லது சிறுமரவகையைச் சார்ந்தது. 5-15 அடி உயரம் வரை வளரக் கூடியது. பட்டை சாம்பல் நிறமுடையது. இளம் பட்டைகள் உரோமங்களால் சூழப்பட்டிருக் கும். இலைகள் 7.5-12.5 செ.மீ நீளமுடை யது. இருப்புறமும் உரோமங்கள் மென்மை யாக காணப்படும். இலையடிக் காம்பு 6-9 மி.மீ நீளமுடையனவாகக் காணப்படும். பூக்கள் கொத்துக் கொத்தாக காணப்படும். சிவப்பு நிறமுடையதாக இருக்கும். பின்பு வெளிறி நீல நிறமாக மாறும். பூந்துணர் 10 காணப்படும். இலை சூலகத்தை சுற்றி வட்ட மாக அடுக்கப்படும். சூலகம் கூம்பு வடிவா னது. வித்துக்கள் அதிகமாக காணப்படும். காய்கள் 2-4 அங்குல நீளமுடையதாகவும் வரிகள் கொண்டதாக திருகுவாயும் காணப் படும்.

### பரம்பலும் இனவிருத்தியும்:

விதைகள் மூலம் இனவிருத்தி செய்ய லாம். மழைகாலங்களில் பயிரிடலாம். இதன் பூக்கள் பங்குனியிலிருந்து புரட்டாதி மாதங் களிலும், பழங்களை மார்கழியிலிருந்து தைமாதம் வரையும் அவதானிக்கப்படும். வடமாகாணத் தில் வட்டக்கச்சி, கல்மடுநகர் பிரதேசங்களில் பரம்பல் அதிகம்.



யாழ். மாவட்டத்தில் திருநெல்வேலியில் பரம்பல் அவதானிக்கப்பட்ட போதிலும் தற்போது அருகிவரும் நிலை காணப் படுகின்றது.

### மருத்துவப்பயன்கள்:

- இதன் இளம் காய்களை நல்லெண் ணெயிலிட்டு காய்ச்சி வடிகட்டி காதில் 4, 5 துளிகள் விட்டு பஞ்சிட்டு துடைக்க காதடைப்பு, காது குத்தல் முதலியன நீங்கும்.
- வலம்புரிக்காயை 10 கிராம் அளவு எடுத்து 200 மில்லி நீரில் முதல்நாள் இரவு ஊறவிட்டு அடுத்தநாள் காலை வெறும் வயிற்றில் அருந்த நீரிழிவு நோய் கட்டுப் பாட்டில் வரும்.
- வலம்புரிக்காயின் உலர்கனிகளை நிழலில் உலர்த்தி 1-2 கிராம் அளவு தேனில் 3 வேளை 5 நாட்கள் தொடர்ந்து கொடுக்க இருமல்,ஆஸ்மா தீரும். தேனில் பொடியை குழைத்து உண்ணலாம்.
- உலர்ந்த வலம்புரிக்காயின் பொடியும், அரிசிச் திப்பிலியின் பொடியும் சமஅளவு கலந்து 2 கிராம் அளவு தேனில் குழைத்துக் கொடுக்க விக்கல் தணியும்.
- வேர்க்கொம்பு, மிளகு, வலம்புரிக்காய், கறிவேப்பிலை இலைகளை சமஅளவு எடுத்து லேசாக வறுத்து, பொடித்து எடுத்த எடைக்கு 1/4 பங்கு பொரித்த பெருங்காயம் கலந்து கூட்டி அதில் ஒருதேக்கரண்டி அளவு சுடு சோற்றிலிட்டு நெய்விட்டு பிசைந்து ஒரு பிடி சாப்பிட்டு வர உணவு நன்கு ஜீரணமாகி நல்ல பசி உண்டாகும்.
- காய்ச்சலிற்கு அதிமதுரம், வலம்புரிக் காய், கொத்தமல்லி, திப்பிலி ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து, அத்துடன் திராட்சை 10 கிராம், ஏலக்காய் 5 கிராம், நெற்பொரி ஒரு கைப்பிடி அளவு சேர்த்து அம்மியில் வைத்து நைத்து ஒரு பாத்திரத்தில் போட்டு 500 மில்லி நீர் விட்டு பாதியாக சுண்டுமளவு குடி நீராக்கி வடிகட்டி காலை, மாலை 25 மில்லி அளவு அருந்த காய்ச்சல் தணியும்.
- தொண்டை அரிப்புடன் கூடிய வறட்டு இருமலுக்கு உலர்ந்த வலம்புரிக்காயை நன்றாகப் பொரித்து அரித்து 4 கிராம் அளவு தேனில் குழைத்து வாயில் போட்டு அடித் தொண்டையில் அமிழும்படி உண்டு வர அரிப்புடன் கூடிய இருமல் தணியும். தினம் இரண்டு வேளை 5 நாட்கள் சாப்பிடலாம்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

# உடன்பாடான உணர்வுகளை வளர்த்துக் கொண்டால்

# முதுமையில் மகிழ்வுடனும் ஆரோக்கியத்துடனும் வாழலாம்

மனிதன் பிறந்ததில் இருந்து அவனுடைய வளர்ச்சிப் பருவங்களை பொதுவாக குழந்தைப் பருவம், குமரப்பருவம், முதுமைப் பருவம் எனப் பிரிப்பது உண்டு. ஒரு பருவம் எப்போது எந்த வயதில் முடிகிறது என்பதையொட்டி நாடுகளுக்குள்ளே வேறுபாடுகள் உள்ளன. முதுமை அடைதல் என்பது வயது சம்பந்தப்பட்ட நோய்கள் வருவதற்கான ஆபத்து அதிகரித்தல், வளர்ச்சி மற்றும் உறுப்புக்களின் இயக்கங்களின் பாதிப்பு, மன அழுத்தங்களை கையாளும் திறன் இழப்பு இப்படிப்பட்ட மாற்றங்களின் ஒட்டு மொத்த பாதிப்பும் மரணமடைதலின் வாய்ப்பு அதிகரித்தல் ஆகும். வயதானோர் அதிக எண்ணிக்கையில் முதுமையினால் மரணமடைதல் விகிதம் அதிகரிப்பதே இதன் சான்றாகும்.

மேலும் முதுமைப்பருவத்து ஆராய்ச்சி



கள் சமீப காலத்தில் தான் அதிகம் தொடங்கப்பட்டுள்ளதுடன் ஓய்வு வயதை நிர்ணயிப்பதன் காரணம் அந்த வயதில் தொடங்கி உடல் உள்ளத்திறன்கள் குறைகின்றன என்பது அவர்கள் கண்ட உண்மைகளாகும். ஆனால் சில உண்மைக்குப் புறம்பாகவே இருக்கிறது. வயதானவர்கள் பிரச்சினைகளை எவ்வளவு திறமையோடு சமாளித்து உள்ளனர் என்பதற்கு சான்றுகளும் உள்ளன.

பொதுவாக முதுமைப்பருவத்தில் உடல்–உளத் திறன்களின் ஆற்றலில் குறைவு ஏற்படுகின்றது என்றாலும் இது ஒருவரது வாழ்ந்த சூழ்நிலை,உணவு ,தொழில், உடற்பயிற்சி மற்ற பழக்கவழக்கங்கள் இவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளன. உடல் நோய் துறையில் *முதுமை நோய்* எனும் பிரிவு ஏற்பட்டிருப்பது போல் உளவியல் துறையிலும் *முதுமைப்பருவ உளவியல்* என்ற பிரிவும் சமீப காலத்தில் பல ஆராய்ச்சி உண்மைகள் வெளிவந்துள்ளன.

முதுமைப்பருவத்தில் உடல் உறுப்புக்களில் மாற்றம் ஏற்படுகின்றன. இம் மாற்றம் உள நிலையை பாதிக்கின்றது. தசைகளை இணைக்கும் திசுக்களின் சுருங்கி விரியும் தன்மை மெல்ல மெல்ல இழக்கின்றன. இதன் காரணமாக உடலின் தோலில் சுருக்கங்கள் ஏற்படுகின்றன. இதன் காரணமாக கோடுகள் விழ ஆரம்பிக்கின்றன. தோலானது இறுக்கத்தை இழக்க கோடுகள் தோன்றுகின்றன. உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போது முகத்தோற்றம் மாறுபடுகிறது. இவை ஆண்களை விட பெண்களை உள்ளத்தால் அதிகம் பாதிக்கிறது. பொதுவாக சமூகம் எப்போதும் பெண்ணிடம் அழகிய தோற்றத்தை எதிர்பார்க்கிறது. இந்த எதிர்பார்ப்பை சந்திக்க முடியாத நிலையில் ஆண்களை விட பெண்கள் உள நிலை அதிகம் பாதிக்கப்படுகிறது எனலாம்.

முதுமைப்ருவத்தினரைப் பற்றிய மக்கள் நோக்கமும் இன்றும் பழைய காலத்து அடிப்படையிலேயே அமைந்துள்ளன. மருத்துவர் பலரும் இதே நோக்குடையவர்களாகவுள்ளனர். 60 வயது ஆனவர் ஒருவர் மூட்டுவலி, கழுத்துவலி என்று ஒரு மருத்துவரிடம் சென்றால் உங்களிற்கு வயதாகி விட்டது. இப்படிப்பட்ட வலி ஏற்படுவது தவிர்க்க முடியாது என்று கூறுவதும் உண்டு. இப்படி மக்கள் வயது வந்தவர்களது நடத்தைக்கெல்லாம் வயது காரணமாக இல்லாவிட்டாலும் அதையே காரணமாகச் சுட்டிக்காட்டி அவர்களிடத்தில் இயலாமை ஏற்படுத்துகின்றார்கள். இதன் காரணமாக ஒரு சிலர் முதுமையில் உளச் சோர்வு ஏற்படுவதும் உண்டு.

உள நோய்கள் ஓர் அளவுக்கு சமூக சூழ்நிலை காரணமாக முதுமைப் பருவத்தினருக்கு ஏற்படும் என உளவியலாளர் கருதுகின்றனர். முக்கியமாக ஓய்வு, வருமானம் போதாமை, கணவன் மனைவி இவர்களில் ஒருவர் இறப்பது. நெருங்கிய உறவினர்கள் நண்பர்கள் இவர்களது இறப்பு போன்றவைகள் முதியவர்கள் உள்ளத்தை பாதிக்கின்றன. இந்த பாதிப்பு பலரின் உடல் உள பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணங்களாக இருக்கலாம் என உளவியலாளர் கருதுகின்றார்கள்.

மன நலம் இல்லாமல் உள்ளவர்களுக்கு உடல் மிகவும் பாதிக்கப்படுவதுடன் காரணம் தெரியாத நோய்களுக்கு ஆளாவார்கள். விரைவில் முதுமையின் அறிகுறிகள் தோன்றும். இதனால் தளர்வு, தள்ளாட்டம் போன்றவை ஏற்படும். ஆயுட்காலம் குறைந்து விரைவில் இறப்பு நேரிடவும் செய்கின்றது.

முதியோர் நல மருத்துவர்கள் எந்த எந்த உணர்வுகளால் முதுமை விரைவில் வருகின்றதென்றும் எந்தெந்த உணர்வுகளால் முதுமை வருவதை தள்ளிவைக்க முடியமெனவும் ஆராய்ந்து வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

01.சோர்வு (Depression), சலிப்பு, மன அழுத்தம் (Stress) முதுமையை விரைவுபடுத்தும் எதிர்மறையான உணர்வுகள்.


02. தன் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமை
03.தனியாக வாழ்தல்
04. தன்னையும் மற்றவர்களையும் மாற்ற இயலாத உணர்வு
05. தனிமை, நண்பர்கள் இல்லாமை
06.தினசரி வாழ்க்கைக்கான ஒழுங்கான திட்டமின்மை
07. தினசரி வேலைத் திட்டமின்மை
08.செய்யும் வேலையில் நிறைவு, திருப்தி இல்லாமை
09. பொருளாதாரப் பற்றாக்குறை, கடன் சுமை
10. அதிக நேரத்திற்கு மேல் வேலை செய்ய வேண்டி இருத்தல்.
11. தொடர்ந்த கவலை, அளவுக்கு அதிகமான கவலை.
12. முன்பு செய்த தியாகங்களுக்காக வருந்திக் கொண்டிருத்தல்
13. எரிச்சல் படல், விரைவில் கோபப்படல், தன் கோபத்தை வெளிக்காட்ட முடியாமை
14. தன்னையும், மற்றவரையும் குறைப்பட்டுக் கொண்டிருத்தல்.

**முதுமையைத் தள்ளிப் போடும் நல்ல உணர்வுகள்.**

01. திருப்தியான மண வாழ்க்கை
02. செய்யும் வேலையில் நிறைவு, திருப்தி, திறமை
03. நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்ற உணர்வு
04. சுலபமாகச் சிரிக்கும் இயல்பு
05. திருப்தியான உடல் உறவு அமைந்த வாழ்க்கை
06. நண்பர்களை ஆக்கிக் கொள்ளும் திறன் நெடுநாள் நண்பராக இருக்கும் திறன்.
07. ஒழுங்கான தினசரி வாழ்க்கை முறை
08.ஒழுங்கான வேலை நியதி.
09. ஆண்டுக்கு ஒருமுறை ஒரு வாரமாவது ஓய்வெடுத்துக் கொள்ளல்
10.நம் வாழ்க்கை நம் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற உணர்வு
11. அனுபவிக்கக் கூடிய ஓய்வு நேரம் திருப்தியான ஓய்வு வேலைகள்
12.உணர்வுகளை சுலபமாக வெளியிடும் திறன்
13. எதிர்காலம் பற்றிய நம்பிக்கையுடன் இருத்தல்
14. போதுமான பொருள் வரவு, வரவுக்கேற்ப சிக்கன வாழ்க்கை.

இந்த உடன்பாடான அல்லது எதிர்மறையான உணர்வு நமக்கு முதுமை ஏற்படுவ தையும் நாம் எவ்வளவு காலம் உலகத்தில் வாழ முடியும் என்பதையும் நிர்ணயிக்கின்றன.

உடன்பாடான உணர்வுகளை சிறு வயதிலிருந்து ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவை வயது ஆக ஆக நமது உடல் நலத்தைக் காக்கவும் முதுமை அடைவதை தள்ளிப் போடவும் நீண்ட காலம் வாழவும் பெரிதும் உதவியாக இருக்கும். அதற்குப் பதில் எதிர்மறை உணர்வுகளை சின்ன வயதிலி



ருந்து வளர்த்துக் கொண்டால் அவை ஓயாமல் நோயையும் உடல் நலமின்மையையும் விரைவில் முதுமையையும் விரைவில் மரணத்தையும் ஏற்படுத்தம். சிறு வயதிலிருந்தே முயற்சி செய்து உடன் பாடான உணர்வுகளை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். மகிழ்வுடனும் உடல் தெம்புடனும் நீண்ட காலம் வாழ இது சிறந்த வழியாகும்.

அமெரிக்காவில் உள்ள ஹார் வேர்ட் பல்கலைக்கழகத்தில் ஜார்ஜ் வைலண்ட் என்னும் உளவியல் அறிஞர் இரண்டாம் உலகப் போரின் போது இதுபற்றி ஓர் ஆராய்ச்சி மேற்கொண்டார்.

185 இளம் பல்கலைக்கழக மாணவர்களைத் தேர்ந்தெடுத்து 40 ஆண்டு காலம் அவர்களது உடல் நலத்தை கண்காணித்து ஒழுங்குபடுத்தி வந்தார். ஒருவர் சிறுவயதில் உடல் நலத்துடன் இருந்தாலும் துன்பங்கள், நெருக்கடிகள், மனப்பாரங்கள் ஏற்படும் போது அவற்றை நல்ல முறையில் ஏற்று சமாளிக்க முடியாவிட்டால் அல்லது சோர்வு, சலிப்பு ஆகியவற்றின் பாதிப்பிற்கு உள்ளாகியிருந்தால் அவர் விரைவில் இறந்து விடுவார் எனக் கண்டுபிடித்தார். நல்ல மனநலம் உள்ளவர்களில் 2 பேர் தான் தொடர்ந்து நோய்வாய்ப்பட்டு 53 வயதில் இறந்தனர். ஆனால் மிக மோசமான மனநலம் பெற்றிருந்த 48 பேர்களில் 18 பேர் தொடர்ந்து நோய்வாய்ப்பட்டு 53 வயதுக்குள் இறந்து விட்டனர். இதிலிருந்து இளம் வயதி லிருந்து நல்ல மனநலம் உள்ளவர்கள் முதுமையடைவதையும், மரணத்தையும் தள்ளிப் போட முடிகிற என்னும் மோசமான மனநலம் உள்ளவர்கள் விரைவில் முதுமை அடைந்து இறந்து விடுவார்கள் என்றும் வைலண்ட் ஆய்வு சுட்டிக் காட்டியது.

சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு நல்ல மனநலம் அமைவதில் பெற்றோர் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். பெற்றோர்கள் முன்மாதிரியாக இருந்து குழந்தைக்கு வழிகாட்ட வேண்டும். நல்ல அறிவுரை கூறி திருத்த வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் நல்ல மனநலம் வளர உதவுவதுடன் நல்ல மனநலத்தின் அவசியத்தையும் அவற்

**கலாநிதி க.கஜவிந்தன்**
**உளவியல் விரிவுரையாளர்**
**யாழ். பல்கலைக் கழகம்**

றை எப்படி உருவாக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். மாணவர்கள் மனநலன் கெடும்படியான நிகழ்வுகள், சூழ்நிலைகள் உருவாகாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட சம்பவங்களை எதிர்கொள்ள வேண்டிய போது எப்படி அவற்றை சமாளிக்க வேண்டும்? எப்படி அவற்றால் மனநலம் பாதிக்காதவாறு காத்துக் கொள்ள வேண்டும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக்கூறி வழிகாட்ட வேண்டும்.

நம் எதிர்காலம் எப்படி இருக்கப்போகிறது? மகிழ்ச்சியாக இருக்கப்போகிறதா, துயரமாக இருக்கப்போகிறதா? நாம் நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்வோமா அல்லது தொடர்ந்து நோய்வாய்ப்பட்டு விரைவில் இறந்து விடப்போகிறோமா என்பது ஓரளவுக்கு நம் கையிலும் உள்ளது. நம் மன நலத்தை நன்கு வளர்த்துப் பாதுகாத்து வந்தால் நாம் நோயற்று மகிழ்ச்சியுடன் நீண்ட காலம் வாழலாம்.

# இரு நாட்களாக பெய்த கடும் மழையால் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கின

## பூநகரி விவசாயிகள் கவலை

(பூநகரி)

பூநகரி பகுதியில் காலபோக விதைப்பு ஆரம்பித்த நிலையில் கடந்த இரு நாட்களாக பெய்த கடும் மழையால் ஆயிரக்கணக் கான ஏக்கர் வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளன.

இதனால் பண்படுத்திய தம் வயல்களில் விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை பற்றி விவா யிகள் கவலையை வெளிப்படுத் தியுள்ளனர்.

இடப் பெயர்வினால் கடந்த இருவருட காலமாக நெற் செய்கை செய்ய முடியாத நிலை ஏற்பட் டதாலும் இம்முறை அரச மானி யங்கள் கிடைப்பதனால் பெரும் அக்கறையோடு விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் விதைத்த வயல்க ளும் நீரில் மூழ்கி உள்ளதனால் இப்பகுதி விவசாயிகள் பெரும் பாதிப்புக்களாகியுள்ளனர். ஶ்ரீ-84

# பொன்சேகாவின் கைது கண்டிக்கப்படவேண்டியது

## ஓய்வு பெற்ற இராணுவத்தினரின் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகக் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் சரத்பொன் சேகா கைது செய்யப்பட்டமை கண் டிக்கப்படவேண்டியதென ஓய்வு பெற்றஇராணுவத்தினரின் அமைப்பு அறிவித்துள்ளது.

சரத் பொன்சேகாவை விடு தலை செய்வதற்காக தம்மாலான சகல முயற்சிகளையும் மேற் கொள் ளத் தீர்மானித்துள்ளதாக அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஓய்வு பெற்ற மற்றும் ஊன முற்ற படையினரால் இந்த கண் டன அறிக்கை வெளியிடப்பட்டுள் ளது.

நாட்டை பாதுகாப்பதற்கான முயற்சிகளின் போது சரத் பொன் சேகா மூன்று தடவைகள் படுகாய மடைந்துள்ளதாகவும் அந்த சந் தர்ப்பங்களில் மக்களின் இரத் தமே அவரை வாழ வைத்ததாகவும் ஓய்வு பெற்ற இராணுவ உயர திகாரி கயான் விதானகே தெரி வித்துள்ளார்.

இவ்வாறான ஓர் வீரர் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை காட்டிக் கொடுக்கமாட்டார் என வும் சரத்பொன்சேகா குற்றம் எத னையும் இழைக்கவில்லை என வும் இதனால் அவர் எவரிடமும் மன்னிப்பு கோர வேண்டிய அவ சியம் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தசாப்தங்களாக நீடித்த பயங் கரவாதத்தை இல்லாதொழிப் பதற்கு தலைமை வழங்கிய மையே சரத்பொன்சேகா இழைத்த குற்றம் என அவர் மேலும் சுட் டிக்காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

# மட்டக்களப்பிலும் சாட்சியங்களை ஆணைக்குழு பதிவு செய்யும்

(மட்டக்களப்பு)

கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக் குழு மட்டக்களப்பில் எதிர்வரும் 09, 10, 11ஆம் திகதிகளில் சாட்சியங் களை பதிவு செய்யவிருப்பதாக அர சாங்கத் தகவல் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவு தகவல் தெரிவிக்கின்றது. இதற் கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மேற்கொண்டுள் ளார்.

இதன்படி இந்த ஆணைக் குழு எதிர்வரும் 09ஆம் திகதி முற்பகல் 9மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத் திலும் மறுநாள் 10ஆம் திகதி முற் பகல் 9மணி தொடக்கம் நண்ப கல் 12.00மணி வரையில் ஓட்ட மாவடிப்பிரதேச செயலகத்திலும் மறுநாள் 11ஆம் திகதி முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 11.30மணி வரையில் செங்கல லடி பிரதேச செயலகத்திலும் சாட் சியங்களை பதிவு செய்யும் .

(ந)



கொழும்பு வெள்ளவத்தை இராமகான சபாவில் அண் மையில் சிறிவித்யா சர்வதேச இந்து மதபீடத்தின் வருடாந்த மகா சபைக் கூட்டத்தில் ஏகமனதாக சர்வதேச இந்து மதபீடாதி பதியாக தெரிவு செய்யப்பட்ட சிவஸ்ரீ சம்பு மகேஸ்வர சிவாச் சாரியாருக்கு இலங்கை யின் மூத்த குரு கப்பித்தாவத்தை பா.சண் முகரட்ணசர்மா அரச அங்கீகார சான்றிதழை வழங்குவ தையும் அருகில் கொழும்பு பாராளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன், ஜனாதிபதி இணைப் பாளர் ஆர்.பாபுசர்மா,தெல்லிப்பழை விஸ்வ நாராயணசர்மா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 06.10.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள் நிகழ்வுகள்

- கி.மு105 - அரவுசயோ போர்: ஞாயுஸ் மல்லயுஸ் மாக்சிமஸ் இன் ரோமானிய படை மீது சிம்ப்ரி கொடூர தாக்குதல்.
- கி.மு.69 -டிக்ரநோசெர்ட போர்: ரோமானிய குடி யரசின் படை, மகாராஜா டிக்ரநேஸ் வழி நடத்திய அர்மேனியா படையை தோற்கடித்தது.
- 1582 - கிரெகொரியின் நாட்கட்டி அறிமுகப் படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம்பெற வில்லை.
- 1683 - வில்லியம் பென் தன்னுடன் 13 ஜெர் மனியக் குடும்பங்களைபென்சில்வேனி யாவுக்கு அழைத்துவந்து குடி யேற்றினார். இவர்களே முதன் முதலாக அமெரிக்காவுக்கு குடியேறிய ஜெர்மன் மக்களாவர்.
- 1789 - பிரெஞ்சுப் புரட்சி:முன்னைய நாள் பெண்களின் போராட்ட அணியை வேர் சாய் அரண்மனையில் எதிர் கொண்ட பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் அங்கிருந்து பாரிஸ் திரும்பினான்.
- 1847 - சாமுவேல் பிஸ்க் கிறீன் பருத்தித்துறையை வந்தடைந்தார்.
- 1849 - ஹங்கேரிய விடுதலைப் போரின் முடிவில் போராளிகள் 13 பேர் "அராட்" (தற்போது ருமேனியா வில்) என்ற இடத்தில் தூக்கிலிடப் பட்டனர்.
- 1854 - இங்கிலாந்தில் நியூகாசில் மற்றும் கேற்ஸ் ஹெட் நகரங்களில் பரவிய பெருந் தீயில் 54 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கா னோர் காயமடைந்தனர்.
- 1870 - ரோம் இத்தாலியின் தலைநகரானது.
- 1889 - தான்சானியாவின கிளிமஞ்சாரோ மலை யின் உச்சி முதன் முதலில் எட்டப்பட் டது.
- 1889 - தோமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது அசையும் படத்தைக் காண்பித்தார்.
- 1890 - யாழ்ப்பாண நகரில் "சின்னக்கடை" சந் தைக் கடைத் தொகுதி இடிந்து விழ்ந் ததில் பலர் கொல்லப்பட்டுப் பலர் படுகா யமடைந்த னர்.
- 1903 - அவுஸ்திரேலியாவின் உயர் நீதிமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.
- 1908 - ஆஸ்திரியா தன்னுடன் பொஸ்னியா ஹெர்செகோவினாவை இணைத்துக் கொண்டது.
- 1922 - முதலாம் உலகப் போர்: இஸ்தான்புல்லில் இருந்து பெரும் வல்லரசுகள் வெளி யேறின.
- 1927 - முதலாவது பேசும் படம் த ஜாஸ் சிங்கர் வெளியானது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: போலந்தின் கடைசி இராணுவத்தினர் தோற்கடிக் கப்பட் டனர்.
- 1955 - வயோமிங்கில் டிசி-4 விமானம் ஒன்று வீழ்ந்ததில் 66 பேர் கொல்லப்பட்ட னர்.
- 1966 - எல்எஸ்டி ஐக்கிய அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டது.
- 1973 - 80 ஆயிரம் எகிப்தியப் படைகள் சூயஸ் கால்வாயைக் கடந்து இஸ்ரேலிய பார்லேவ் கோட்டை அழித்து, யொம் கிப்புர் போரை ஆரம்பித்தனர்.
- 1976 - பார்படோசில் இருந்து புறப்பட்ட கியூபாவி மானம் ஒன்று பிடெல் காஸ்ட்ரோவுக்கெதி ரான தீவிரவாதிகளால் குண்டுவைத்துத் தகர்க்கப் பட்டதில் 73 பேர் கொல்லப்பட்டனர்.
- 1976 - தாய்லாந்தில் அரசுக்கெதிராக இடம் பெற்ற மாணவர் போராட்டம் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான மாணவர் கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1981 - எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் கொலை செய்யப்பட்டார்.
- 1987 - பிஜி குடியரசாகியது.
- 1995- சூரியனுக்கு அடுத்ததாக கோளைத் தன்ன கத்தே கொண்ட பெரும் விண் மீன் 51 பெகாசி கண்டறியப் பட்டது.
- 2000 - யுகோஸ்லாவியா ஜனாதிபதி ஸ்லோ போடன் மிலோசெவிக. ராஜினாமா செய்தார்.
- 2002 - பிரெஞ்சு எண்ணெய்த் தாங்கி யேமனில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1887 - லெ கொபூசியே, கட்டிடக் கலைஞர் (இ. 1965)
- 1946 - வினோத் கண்ணா, ஹிந்தி நடிகர்.
- 1982 - சிபிராஜ், தமிழ் திரைப்பட நடிகர்
- 1982 - எம்சி லார்ஸ், அமெரிக்க ஹிப்-ஹோப் கலைஞர்.
- 1982 - மைக்கேல் அர்டேன், அமெரிக்க நடிகர்
- 1982 - வில்லியம் பட்லர், இசை கலைஞர்
- 1984 - ஜோவன்ன பசிட்டி, அமெரிக்க நடிகை மற்றும் பாடகி.
- 1984 - மோர்னே மோர்கெல், தென் ஆபிரிக்க மட்டைபந்து வீரர்
- 1985 - சில்வியா போவ்லேஸ், அமெரிக்க கூடைப் பந்து வீராங்கனை.
- 1986 - தெரேசா கேர்ந்ட்லோவ, செக் குடியரசு பாடகி.

### இறப்புகள்

- 1661 - குரு ஹர ராய், ஏழாவது சீக்கிய குரு (பி.1630)
- 1892 - அல்பிரேட் லார்ட் டென்னிசன், ஆங்கிலேய கவிஞர் (பி: 1809)
- 1905-பேர்டினண்ட் வொன் ரிச்தோஃபென், ஜெர்மனிய புவியியலாளர் (பி.1833)
- 1981 - அன்வர் சதாத்,எகிப்திய ஜனாதிபதி , நோபல் பரிசு பெற்றவர். (பி.1918)
- 2007 - லக்சுமி மால் சிங்குவி, இந்திய சட்ட வல்லுநர் மற்றும் எழுத்தாளர் (பி. 1931)

**1762 - ஏழாண்டுப் போர்: பிரித்தானி யாவுக்கும் ஸ்பெயி னுக்கும் இடையில் மணிலாவில் இடம் பெற்ற போர் முடிவுக்கு வந்தது. ஏழாண்டுப் போர் முடிவடையும் வரையில் பிரித்தானியா மணிலாவை தன் பிடியில் வைத்திருந்தது.**



# ஈழத்தவர் வரலாறு

57

## 8.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம்



கொண்டொழுகுஞ் சுயாதீனம் ஆங்கில வரசாற் கொடுக்கப்பட்டது. முன்னர் கோயில் போலாது, கொட்டில்போல இலைமறைவிற்கிடந்த கோயில்களெல்லாம் வெளிப்படத் தொடங்கின. இடிந்த கோயில்களை மீளக் கட்டிக்கொள்ளும்படி ஆங்கிலவரசு வந்தவுடன் அனுமதி கொடுக்கப்பட்டது.

அக்காலவேளை நல்லூர் கந்தசுவாமி கோயில் அர்ச்சகராக, கிருஷ்ணையர் சுப்பையரின் பேரர் சுப்பையர் என்ற வால சுப்பிரமணிய ஐயர் இருந்தார். ஆலயத் தர்மகர்த்தாவாக இரசுநாதமாப்பாண முதலியாரின் மகன் ஆறுமுக மாப்பாண முதலியார் இருந்தார். ஆங்கிலரசினர் சைவாலயங்களுக்கு அர்ச்சகர்களை நியமனஞ் செய்தனர்.

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

'நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகாண்டபத்துக் கீழைச் சுவரிலே மேற்குமுகமாக இக்கோயில் தாபகராகிய இரகுநாத மாப்பாணர் பிரதிமையும், அவர் மனைவி பிரதிமைம வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை இன்றும் பார்க்க முடியும்.

கோயில் கட்டியத்தில் இரகுநாத மாப்பாணரின் பெயர் இடம் பெற்றதால், அக்கோயில் தாபகர்களில் ஒருவரான கிருஷ்ணையர் சுப்பையரின் பெயர் உரிய கௌரவத்தைப் பெறாது போனது.


**ஆங்கிலேயர் காலம்**

கி.பி.1798 ஆம் ஆண்டு யாழ்ப்பாண வரசு ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்தது.

குடிகளும் தத்தமது வருணாசாரத்தையும் சமயாசாரத்தையும் சுயேச்சையாகக் கைக்

அவர்களுக்குரிய மரியாதைகளும் வரிசைகளும் ஆணைப்பத்திரமூலமாகத் தேசாதிபதி கைச்சாத்தோடு நியமன நிரூபம் பெற்றாருள்ளே முதல்வர் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்சகர் சிகிவாகன ஐயர் புத்திரராகிய வாலசுப்பிரமணிய ஐயர்.

இவருக்கு நியமனப்பத்திரம் 1807 ஆம் ஆண்டு ஜன வரி மீ 5 ஆம் திகதி தேசாதிபதி தோமஸ் மெயிற்லண்ட் (கவனர்) அவர்களாற் கொடுக் கப்பட்டது. அப்பத்திரம் இன்றும் அவர் சந் ததியாரிடமுள்ளது. கிறிஸ்து வருஷம் 1807 ஆம் வருடம் தை மீ 5 ஆம் திகதி சகல குருத் துவ மரியாதைகளுடன் குருபிரதானியாக இவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி, வேறு ஐந்து குருமார்களை இவருக்குத் துணையாகக் குருத்துவம் நடத்தும்படியும் கவனர் உத்தரவு செய்திருக்கின்றார். அவர்களில் கணபதி ஐயரும், இராமசாமி ஐயரும் குறிப்பிடத்தக்கவர் களாவர். பக்தகோடிகளால் நன்கு மதிக்கப்பெற்றுச் சிறப்பாக நித்திய நைமித் தியங்கள் நடைபெற்றன.




கந்தசுவாமி கோயில் ஆலய நிர்வா கத்தில், பிரதம அர்ச்சகர் சுப்பையருக்கும், தர்மகர்த்தா ஆறுமுக மாப்பாணருக்கும் இடையில் பிரச்சினைகள் முதன்முதலாகத் தலை தூக்கின. 'ஆலய நிதியைத் தனது சுய தேவைகளுக்கு ஆறுமுக மாப்பாணர் பயன் படுத்துவதாக, நீதிமன்றில் வழக்கு ஒன்று சுப்பையரால் தாக்கல் செய்யப்பட்டது. அத னை பிரதம நீதியரசர் சேர். அலெக் சாண்டர் ஜோன்ஸ்ரன் என்பவர் விசாரணை செய்தார். அவர் தனது தீர்ப்பைப் பின்வரு மாறு வழங்கினார்.

"கந்தசுவாமி கோயிலின் சகல நடவடிக்கைகளையும் இன்றைய பிரதம குருவும், (ஆறுமுக) மாப்பாண முதலியாரும் இணைந்தே நிர்வகிக்க வேண்டும்.

ஆலயப்பொருட்களுக்குச் சேதாரம் நேரா வண்ணம் அவை ஓர் அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, அந்த அறை இரு பூட்டுகளால் பூட்டப்பட வேண்டும்.

அப்பூட்டுகளின் சாவிகளிலொன்று பிரதம குருவிடமும், மற்றையது குறித்த (ஆறுமுக) மாப்பாணரிடமும் இருத்தல் வேண்டும்."

இத்தீர்ப்பு ஆறுமுக மாப்பாண முதலியாருக்குத் திருப்தியைத் தரவில்லை. கோயில் தம் குடும்பச்சொத்து, அதனால் கோயில் நிர்வாகம் முழுவதும் தமக்குரியதென அவர் கருதியதால், 1809 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கத்துக்கு ஒரு பெட்டிசம் ஒன்றினைச் சமர்ப்பித்தார். அப்பெட்டிசம் 1811 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கலெக்டரால் (அரசாங்க அதிபர்) விசாரணை செய்யப்பட்டது. அவர் முன் வைக்கப்பட்ட ஆதாரங்கள், கோயிலின் உரிமையில் மாப்பாண முதலியாருக்கே சாதகமாகவிருந்தன. 'ஆறுமுக மாப்பாண முதலியார் கொடுத்த பெட்டிசத்தை விசாரித்த கறிங்றன் என்னும் கலெக்டர், இம் மாப்பாண முதலியாரின் தகப்பனே இக் கோயிலைக் கட்டுவதற்கு முக்கிய காரணராயிருந்தமையால் இவரே கோயிலதிபதித்துவம் பெறுதற் குரியவரென்று அரசாட்சியாருக்கு அறிக்கை செய்தார்.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

(தொடரும்)

## சீனா மற்றும் இந்தியாவின் ஒத்துழைப்புடனேயே குறுகிய காலத்தில் புலிகளை தோற்கடிக்க முடிந்தது

### ஐ.நா.வுக்கான இலங்கையின் முன்னாள் பிரதிநிதி தெரிவிப்பு

சீனா மற்றும் இந்தியாவின் ஒத்துழைப்பின்றி யுத்தத்தை வென்றிருக்க முடியாது என ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் முன்னாள் பிரதிநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களை இலங்கை வெற்றிகரமாக முறியடித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பு காரணமாக மேற்குலக நாடுகளின் விமர்சனங்கள் மற்றும் அழுத்தங்களை வெற்றி கொள்ள முடிந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் ஆயுதங்களை வழங்கி யுடன் பாதுகாப்புப் பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் குரல் கொடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களின் போதும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் ஆதரவளித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்கியதாகவும் இதனால் தமிழீழ விடுதலைப்புலிகளை குறுகிய காலத்தில் யுத்த ரீதியாக தோற்கடிக்க முடிந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியாவைத் திருப்திப்படுத்தும் அதேவேளை சீனாவிடமிருந்து உச்சளவு உதவிகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கப்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் நந்த கொடகே தெரிவித்துள்ளார்.

எனினும் சீனா , ரஷ்யா போன்ற நாடுகளின் நெருங்கிய உறவினால் மேற்குலக நாடுகள் அதிருப்தியுடன் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (ஸ்ரீ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு தசமுக அர்ச்சனையும் மாலை 7 மணிக்கு சப்பறமும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

## சமாதான உடன்படிக்கை குறித்து ஆராயவே நோர்வே குழு நியமனம்

### விமல் வீரவன்ச தெரிவிப்பு



சமாதான உடன் படிக்கை மீறப்பட்டமை தொடர்பில் ஆராய்வதற்கு நோர்வே இராச்சியத்தினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

நோர்வே அதிகாரிகள் பிறிதொரு நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து இலங்கையின் சமாதான உடன்படிக்கை எப்படி மீறப்பட்டது என்பது குறித்து ஆராய தயாராவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இலங்கையின் பௌதீக தன்மை குறித்து அந்த குழுவிற்கு விளக்கமொன்றை பெற்றுக் கொள்ள முடியும் என தாம் நம்பவில்லை எனவும் விமல் வீரவன்ச அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தால் விவசாய உபகரணங்கள் அன்பளிப்பு

(பூநகரி)

பூநகரி கமநல சேவை நிலையத்தின் கீழ் இயங்கும் பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த 19 கமக்கார அமைப்புக்களுக்கும் தலா ஒவ்வொரு இரு சில்லு உழவு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சிமாவட்ட கமநல சேவை ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் முகமாக இவ் இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சகல கமக்கார அமைப்புக்களும் இவ் இயந்திரங்களை பொறுப்பேற்றுக் கொண்டன. காலபோக வேளாண்மைக்காக சகல விவசாயிகளுக்கும் இதன் சேவை கிடைக்குமென சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-84)

# 01 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

முதலாம் திகதி பிறந்தவர்கள் பெரும்பாலும் அதிகாரத் தன்மை படைத்தவர்களாதலால், இவர்கள் பெரும்பாலும் அடுத்தவர்களை ஏவல் செய்யக்கூடியவர்களாகவே இருப்பார்கள். அதிகாரத்தால் அடுத்தவர்களைப் பணிய வைக்கும் குணம் அதிகம் காணப்படும். இவர்களின் தொழில் அதிபதி எண்களைப் பார்ப்போம். முதலாம் திகதியில் பிறந்தவர்களுக்கான தொழில் அதிபதி எண் 2. இவர்கள் பெரும்பாலும் நன்மை செய்யக்கூடிய எண்களான 4 மற்றும் 6ஆம் எண்ணின் ஆதிக்கத்தின்படியே ஜீவனம் செய்வார்கள். இந்த திகதியில் பிறந்த அரசு ஊழியர்கள் பெரும்பாலும் உயர் பதவியில் இருப்பவர்களே. இவர்களின் தொழில் எண் 2 ஆக இருப்பதால் மனநிலையை அனுசரித்தே அனைத்து செயல்களையும் செய்வார்கள். மேலும் நன்மை செய்யும் எண்களான 4 மற்றும் 6ஆம் எண்களின் ஆதிக்கப்படியும் இவர்களின் செயல்கள் அமையும்.

திடீர் கோபம் அல்லது மனக்கசப்பு இவர்களிடம் அடிக்கடி வெளிப்படும். அதிகார வட்டாரங்கள் என்று கூறப்படும் இவர்கள் எப்போதும் தற்பெருமை உடையவர்களாகக் காணப்படுவார்கள். அனுசரித்துச் செல்லும் போக்கு குறைவாக இருக்கும். தான் நினைத்ததைச் சாதிக்கும் எண்ணம் மேலோங்கி நிற்கும். இதனால் இவர்கள் சமயத்தில் பெரும் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வதும் உண்டு.

மன அழுத்தம் அதிகம் காணப்படுவதால் அசுரத்தனமாகவும் சிலர் நடந்து கொள்வார்கள். எளிதில் சமாதானமடையாதவர்கள். ஆதலால் எப்பொழுதும் ஏதாவது ஒரு பிரச்சினையில் மாட்டிக் கொண்டே இருப்பார்கள். மணவாழ்க்கை நன்றாக அமையப் பெற்றவர்கள் உத்தியோகத்தில் பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டும்; மண வாழ்க்கை சரிவர அமையாதவர்கள் உத்தியோகத்தில் நிறைவான அமைப்பைப் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். இவர்களின் எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வந்துகொண்டே இருக்கும். தகுந்த வழிபாடுகளைச் செய்து பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம்.

**(மீனாட்சி மற்றும் துர்க்கை ஆகிய தெய் வங்களுக்கு ரோஜா இதழ்களால் அர்ச் சனை செய்து வழிபடவும்)**

இந்த திகதியில் பிறந்த தொழில் அதிபர்கள் பெரும்பாலும் சிறந்த தொழிலாளர்களைப் பெற்று சுகவாழ்வு வாழப் பிறந்தவர்களாவார்கள். தொழில் எண் 2; தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் எண்களான 4 மற்றும் 6ஆம் எண்களால் நன்மைகளே கிடைக்கப் பெறுவார்கள். இவர்களின் மனதில் எப்போதும் எதிர் பார்ப்பு இருந்து கொண்டிருக்கும். எண்ணியபடி செயல்பட வேண்டும் என்று எந்நேரமும் நினைத்து, அதன்படி தொழிலில் கவனம் செலுத்துவார்கள். இதனால் இவர்கள் மாற்றத்தையும் மாறுதல்களையும் செய்து இலாபம் அடையும் நிலையே பெரும்பாலும் இருக்கும்.

மனைவி எண் சரியாக அமையப் பெற்றவர்கள் வாழ்வில் ஒருபோதும் சரிவைச் சந்திக்க மாட்டார்கள் என்பது உறுதி. நன்மை செய்யும் எண்ணிற்கு நட்பு எண்களான 1, 3, 5, 9 ஆகிய எண்களில் பெயர் இருந்து தொழில் செய்பவர்கள் அதிகமான ஆதாயத்தைப் பெறக் கூடியவர்களாக இருப்பார்கள். எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் தொழில் மேன்மை இல்லாமல் கடன் பிரச்சினை மற்றும் குடும்பப் பிரச்சினைகளில் சிக்கி பெரும் சரிவைக் காண்பவர்களாகி, மனநிலையில் குழப்பங்கள் அதிகமாகும் நிலை உண்டாகும்.

**(இவர்கள் எண் ஆதிக்கம் பெறவும் தொழில் சிறக்கவும் செந்தாமரை மலர் வைத்து சூரியனுக்கும், வில்வ இலை வைத்து ஈசனுக்கும் அர்ச்சனை செய்து வர நன்மை கள் உண்டாகும்)**

இந்தத் திகதியில் பிறந்த தொழிலாளர்கள் எப்போதும் மனதால் நன்மையும் தீமையும் மாறி மாறிப் பெறக் கூடியவர்களாவார்கள். அடிக்கடி நிறுவனத்தை மாற்றிக் கொள்பவர்களும் இவர்களே. இவர்களுக்கு தொழில் நிலை சரிவர அமையாவிட்டாலும் பெரும்பாலும் மணவாழ்க்கை நன்றாக இருக்கிறது. அதிக சிந்தனை செய்து தொழில் செய்பவர்கள் இவர்களே. போராடக் கூடிய குணம் உடையவர்களாக இருப்பதால் தொழிற் சங்க நிர்வாகிகளாகவும், தலைமைப் பொறுப்பேற்கும் நிலையும் இவர்களுக்கு இருக்கும். எண் ஆதிக்கம் குறைவாக இருப்பதால்தான் இவர்கள் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். எண் ஆதிக்கம் கிடைக்கும் காலம் வரும்பொழுது, அதை சரியாகப் பயன்படுத்தி எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஒரே நோக்கத்துடன் இருந்து மிகப் பெரிய தொழில் நடத்தும் நிலையை அடைவார்கள்.

**(வழிபட வேண்டிய தெய்வங்கள்: கருப் பண சாமி, அய்யனார் போன்ற காவல் தெய் வங்கள்)**

இந்த எண்ணில் பிறந்த கலைத்துறையினருக்குப் பெரும்பாலும் சிறப்பான அமைப்பே காணப்படும். இவர்கள் வாழ்வில் பெரும்பகுதி சங்கடங்களை அனுபவித்தாலும், தொழில் ரீதியாக மன நிம்மதி கிடைக்கப் பெறுவார்கள். கலையால் புகழ், அந்தஸ்து பெற்று பெரும் போக்காக வாழும் நிலை இருக்கும். சரியான திட்டங்கள் ஏதுமின்றி செயல்படுவதால் வாழ்வின் பிற்பகுதியில் கவலைப்படுபவர்களாகவும் பொருளாதாரக் குறைபாடுகளைச் சந்திக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்களின் தொழில் உதவி எண் 4 மற்றும் 6ன் ஆதிக்கம் மட்டுமே செயற்படுவதால் (கவனமாகப் படிக்கவும் - முதலாம் எண் இவர்களுக்குச் செயற்படுவதில்லை) வாழ்வின் பிற்பகுதி வருந்தும் விதமாக அமைந்து விடுகிறது. 4 மற்றும் 6ஆம் எண்களின் நட்பு எண்ணான 8ஆம் எண் இவர்களின் தவறுகளை வெளிப்படுத்தி அவப்பெயரை உண்டாக்குவதே இதற்குக் காரணமாகும். முதலாம் எண்ணில் பிறந்து, 8ஆம் எண் இவர்களின் செயற்பாடுகளை சீர்தூக்கிப் பார்ப்பதால் தான் பெரும்பாலான கலைஞர்கள் சரியான மண வாழ்க்கை அமையாமலும், நிம்மதி இன்றியும் கடைசி காலத்தில் சிரமப்படுகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

**(இவர்கள் வெண்தாமரை மலர் வைத்து சரஸ்வதியையும், செந்தாமரை மலர் வைத்து மகாலட்சுமியையும் வழி பாடு செய்தால் நன்மைகள் அதிகம் கிடைக்கப் பெறலாம்.)**

முதலாம் திகதியில் பிறந்தவர்களுக்கு வாழ்நாளில் குறைந்தபட்சம் 19 வருடங்களும் மிக அதிக பட்சமாக 23 வருடங்களும் சிறப்பான பலன்களைச் செய்யும். விதி எண்ணின்படி யோக பலன்கள் அதிகமாகவும் குறைவாகவும் நடைபெறும். பொதுவாக பிறந்த திகதி 1, விதி எண் 2 ஆக இருப்பவர்களுக்கு இடைவெளி விட்டு 4 அல்லது 6 வருடங்கள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 1

**எஸ்.என்.ஹரிஜி**

விதி எண் 3ஆக உள்ளவர்களுக்கு 19 வருடங்கள் சிறப்பான பலன்கள் கிடைக்கும். பிறந்த திகதி 1, விதி எண் 4ஆக இருப்பவர்களுக்கு அதிகபட்சமாக 37 வருடங்கள் சிறப்பான பலன்கள் நடைபெறும்.

பிறந்த திகதி 1, விதி எண் 5ஆக இருப்பவர்களுக்கு 28 வருடம் சிறப்பான பலன்கள் செய்யும். பிறந்த திகதி 1, விதி எண் 6ஆக இருப்பவர்களுக்கு 37 வருடங்கள் சிறப் பான பலன்கள் செய்யும். பிறந்த திகதி 1, விதி எண் 7ஆக இருப்பவர்களுக்கு 19 வருடங்கள் சிறப்பான பலன்கள் செய்யும். பிறந்த திகதி 1, விதி எண் 8ஆக இருப்பவர்களுக்கு 10 முதல் 19 வருடங்கள் சிறப்பான பலன்கள் செய்யும். பிறந்த திகதி 1, விதி எண் 9ஆக இருப்பவர்களுக்கு 19 முதல் 27 வருடங்கள் சிறப்பான பலன்கள் செய்யும்.

குறிப்பு : மற்ற எண்களின் ஆதிக்கத்தைப் பொறுத்தும் பெயர் எண்ணைப் பொறுத்தும் பலன்கள் மாறுபடும் என்பதையும் மனதில் பதிவு செய்து கொள்வது நலம்!

(தொடரும்)

# அயோத்தி வழக்கின் தீர்ப்பு சரியானதல்ல: இராமர் பிறந்ததற்கான எந்த ஆதாரமுமில்லை

## தொல்.திருமாவளவன் தெரிவிப்பு

அயோத்தி தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சரியானதல்ல. அங்கு இராமர் பிறந்ததற்கான எந்த ஆதாரங்களும் கிடையாது.

இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்திருமாவளவன் கூறியுள்ளார். பிற்படுத்தப்பட்ட சிறுபான்மை மக்கள் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தொல். திருமாவளவன் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

'எனக்கு 'என் மொழி என் தாயை போன்றது. அதே சமயம், மற்ற மொழி இழிவானது என்று பொருள் அல்ல. அதுவும் எனது தாய்மார்களை போன்றது. நாட்டில் உள்ள எந்த மொழியும் தாழ்வானது இல்லை. கன்னட மொழியை மதிக்கிறேன், நேசிக்கிறேன். எல்லா மக்களும் எல்லா மொழியையும் மதிக்க வேண்டும். கன்னட மொழியை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இருக்கிறது. அதிக பணிச்சுமை காரணத்தால் கன்னடத்தை என்னால் கற்க முடியவில்லை. எல்லா மொழிகளையும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும் . அடுத்த தடவை பெங்களூர் வரும்போது, கன்னடம் கற்றுக்கொண்டு உங்களிடத்தில் பேசுவேன். நம்மிடம் ஒற்றுமை இல்லாவிட்டால் நமது உரிமைகள் பறிபோய்விடும். ஒற்றுமை இல்லாததால் நமது நாடே முற்காலத்தில் வேறு ஒரு ஆதிக்கத்தின் கீழ் சென்றது. தலித் மக்கள், சிறுபான்மையின மக்கள், ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்டால் அடக்குமுறையில் இருந்து நாம் எல்லாம் விடுபட முடியும். பதவிக்கோ, புகழுக்கோ ஆசைப்பட்டு கட்சியில் இணைய வேண்டாம். ஒடுக்கப்பட்ட மக்களை பாதுகாக்க நீங்கள் போராட வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்காக உருவாக்கப்பட்டது தான் தலித் அரசியல்களம். எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்கக்கூடாது. அம்பேத்கரின் கனவை நனவாக்க நாம் எல்லோரும் கைகோர்த்து செயலாற்ற வேண்டும்.


அகில இந்திய அளவில் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், தலித் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லோரும் ஒன்றாக இணைந்தால், இவர்களில் ஒருவர் தான் நாட்டின் பிரதமராக வரமுடியும். நம்மிடம் ஒற் றுமை இல்லாததால் நம்மால் அந்த பத வியை அடைய முடியவில்லை. மக்கள் தொகையில் 3 சத வீதம் மட்டுமே உள்ள ஒரு சமுதா யத்தை சேர்ந்தவர்களில் ஒருவர் பிரதமர் ஆகிறார். அதற்கு அவர்கள் நம்மை எல்லாம் அடக்கி ஆள்வது தான் காரணம்.

தலித் மக்கள் வெறும் ஓட்டுபோடும் எந்திரங்களாக மட்டுமே பயன்படுத்தப்படுகிறார்கள். நகரத்தை தூய்மை செய்கிறோம் என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்களை அரசுகள் அவர்களை விரட்டி அடிக்கிறது. கர்நாடகத்தில் தலித் மக்களுக்கு ஏற்படும் அநீதியை எதிர்த்து எங்கள் கட்சி போராடும். தலித் மக்களுக்கு எங்காவது கொடுமை ஏற்பட்டால் கொதித்து எழ வேண்டும்.

இராமஜென்மபூமி - பாபர் மசூதி வழக்கில் வழக்கு போட்ட 3 பேருக்கும் சரிசமமாக நிலத்தை பங்கு போட்டு கொள்ள வேண்டும் என்று நீதிபதிகள் தீர்ப்பு கூறி இருக்கிறார்கள்.

இது சரியான தீர்ப்பு அல்ல. அப்படி என்றால் 10 பேர் வழக்கு போட்டிருந்தால் 10 பேருக்கும் சரிசமமாக அந்த நிலத்தை பங்கு போட்டு கொள்ள தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்குமா?. இந்த வழக்கில் நீதிமன்ற மரபே மீறப்பட்டு இருக்கிறது.

ஆனால் அந்த தீர்ப்பு அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடியது, வரவேற்கத்தக்க தீர்ப்பு என்று எல்லா அரசியல் கட்சி தலைவர்களும்



அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள்.

கலவரம் ஏற்படக்கூடாது என்பதற்காக இவ்வாறு அவர்கள் அறிக்கை வெளியிடுகிறார்கள். இராமர் பிறந்ததற்கான எந்த ஆதாரமோ, ஆவணங்களோ கிடையாது. ஆனால் பாபர் ஒரு வரலாற்று நாயகன் என்பதை வரலாறு கூறுகிறது' என்று கூறினார்.

(ந-5)

# குழந்தைகளுக்கு அடிக்கடி சளி பிடிப்பது காய்ச்சல் வருவது எல்லாம் எதனால்?

குழந்தைகளுக்கு அடிக்கடி காய்சசல் வருவது சளிப்பிடிப்பது எல்லாம் எதனால் இதற்கு முக்கியமான நான்கு காரணங்கள் அலர்ஜி, சுற்றுச் சூழல் பாதிப்பு , இன்ஃ பெக்ஷன், நோய் எதிர்ப்புத் திறன் குறைவாக இருப்பது.

நம் வீட்டில் உள்ள ' டஸ்ட்' குழந்தைகளுக்கு முதல் எதிரி. அதேபோல் கல்யாண வீடு, பொருட்காட்சி, தியேட்டர் என்று குழந்தைகளை நெரிசல்மிக்க இடங்களுக்கு தூக்கிச் செல்வது அலர்ஜிக்கு ஒரு காரணம். இது எல்லாவற்றிக்கும் மேலாக டெடிபியர் பொம்மைகளை கட்டிப்பிடித்துக் கொண்டு குழந்தைகள் தூங்கும் பழக்கம் ஆரோக்கியமான தல்ல.

அதேபோல் நுளம்பு விரட்டி சுருள், ஊதுபத்தி புகை முதல் நாம் உபயோகிக்கும் செண்ட், ஸ்ப்ரே எல்லாம் குழந்தைகளின் சுவாசத்தைப் பாதிக்கும். சமாச்சாரங்கள்.

## உங்களுக்குத் தெரியுமா?



வெறும் வயிற்றில் கோப்பி, தேநீர் அல்லது பால் சாப்பிட்டு விட்டு மாத்திரைகளை சாப்பிடும் வழக்கம் நம்மில் பலரிடம் உள்ளது. இப்படிச் செய்வது தவறு. மீறி செய்தால் தேவையில்லாத நோய்களை 'இன்கமிங்' கொடுத்து வரவழைத்ததாகி விடும்.

'அண்டி பயோடிக்' மாத்திரைகளை அடிக்கடி சாப்பிடுவதால் ஜீரண உறுப்பு அரிக்கப்படுகிறது. இதனால் உடலில் உள்ள 'பி காம்ப்ளக்ஸ்' குறைகிறது. அதைத் தொடர்ந்து வாய்நாற்றம், தொண்டையில் அல்சர், நாக்கு வறண்டு இருத்தல் போன்ற பிரச்சினை ஏற்படுகிறது.

தலைவலியிலும் காய்ச்சலிலும் பல வகைகள் இருக்கின்றன. இதில் ஏதேனும் ஒன்றால் பாதிக்கப்பட்டு, அது எந்த வகை என்று தெரியாமல் ஒரே மாத்திரைகளை தொடர்ந்து சாப்பிடுவது தவறு. இந்தப் பழக்கம் அதிகமானால் சில நேரங்களில் உயிருக்கே ஆபத்தாகிவிடலாம்.


இன்ஃபெக்ஷனைப் பொறுத்தவரை முதல் ஆபத்து 'ஃபீடிங்' போத்தல்கள் தான். நன்றாகச் சுத்தப்படுத்த முடியாத பால் போத்தல்கள் குழந்தைகளின் நிரந்தரத்தொல்லைகளுக்கு காரணமாகின்றன. குழந்தைகள் வளர வளர ஆரோக்கியம் பெருகுவதற்கு பதில் நோய்கள் பெருக முக்கிய காரணம், பிறந்த முதல் நான்கு நாட்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கிடைக்காதது தான்.

குறைப்பிரசவத்தாலும் சிசேரியனாலும் அவதிப்படும் தாய்மார்கள் சீம்பால் எனப்படும் முதல் நான்கு நாட்கள் சுரக்கும் தாய்ப்பாலை குழந்தைகளுக்கு தரமுடியாத பொழுது, நோய் எதிர்ப்பு சக்தி குழந்தைகளுக்கு குறைவாகிவிடுகிறது.

இன்ஃபெக்ஷனுக்கு இன்னொரு காரணம் அஃபெக்ஷன்... குழந்தைகளை சகட்டு மேனிக்கு முத்தம் கொடுப்பது கூட குழந்தைகளின் நீண்டகால சளி, காய்ச்சல் தொல்லைகளுக்கு காரணம்.

இந்த அடிப்படைக் காரணங்களில் நாம் போதுமான கவனம் வெலுத்தினால் குழந்தைகளின் சளி, காய்ச்சல் தொல்லைகளை பெரும்பாலும் தவிர்த்துவிடலாம். ஒரு சில குழந்தைகளுக்கு மட்டும் இரத்தத்தில் உள்ள காமா குளோபுவின் என்ற அணுக்களின் குறைபாடு இதற்கு காரணமாக இருக்கும்.

# பூண்டு அவசியம்...!



பாலூட்டும் தாய்மார்களுக்கு தினந் தோறும் இரவில் பாலில் பூண்டு போட்டு காய்ச்சிக் கொடுத்தால் தாய்ப் பால் பெருகுவதுடன்வயிற்று உப்புசம், பொருமல் எதுவும் வராது. கர்ப்பப்பையில் சேர்ந்துள்ள அழுக்கை அகற்றும் தன்மை பூண்டிற்கு உண்டு.

தசைவலி இருக்கும் இடத்தில் பூண்டை நசுக்கி வைத்துக் கட்டினால் வலி சீக்கிரம் குறையும். உடம்பில் கொழுப்பை சேரவிடாமல் தடுக்கும் ஆற் றல் பூண்டுக்கு உண்டு. ஆகையால் தான் கரையாத கொழுப்பு சத்து உள்ள மாமிச உணவு சமைக்கும் போது பூண்டை அவசியம் சேர்க்கின் றனர்.

இரவு உணவுடன் பச்சையாகவோ அல்லது பாலிலோ மூன்று பூண்டு பற்களை சாப்பிட்டால் ஆழ்ந்த உறக்கம் ஏற்படும். கனவுத் தொல்லை இருக்காது.

பூண்டிற்கு இரத்த அழுத்தத்தைக் கண்டிக்கும் சக்தி உண்டு. அதனோடு இதய தசைகளையும் இரத்தக் குழாய் தசைகளையும் வலுப்படுத்தும் சக்தி பூண்டிற்கு உண்டு. பூண்டு ஒரு நார்ச்சத்து மிகுந்த உணவு என்பதால் மலச்சிக்கலை அகற்றும் குணம் பூண்டிற்கு உண்டு.பூண்டை உணவில் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பு இல்லாதவர்கள் பூண்டு மாத்திரைகளை சாப்பிடலாம். இதனால் வயிற்று உப்பிசம் நீங்கி, தொப்பை குறை யும் வாய்ப்பு அதிகம்.

# உடல் உறுப்புக்கள்-சருமம்

இயற்கையின் விநோதப் படைப்புகள் அனைத்தும் வியப்புக்குரியவை. அதில் மானிடப்படைப்பு அதனினும் வியப்புக் குரியது. இதையே சித்தர்கள் அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளது என்றனர். பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் உடலோடு தொடர்பு கொண்டவை. அத்தகைய உடலை பேணிப் பாதுகாத்தால் தான் நீண்ட ஆரோக்கியத்தைப் பெற முடியும்.

மனித உடலின் ஒவ்வொரு உறுப்பும் மிகவும் இன்றியமையாதது ஆகும். அவற் றில் ஏதேனும் ஒன்றில் பாதிப்பு ஏற்பட்டாலும் உடல் முழுமையாக பாதிப்படையும். இத்தகைய உறுப்புக்களில் தோல் அதாவது சருமம் ஒன்று. மனித உடலின் மிகப் பெரிய உறுப்பும் தோல் தான். அத்தகைய தோல் உடலின் உள்ளே உள்ள தசைகள், எலும்பு , இதயம், நுரையீரல் போன்ற அனைத்து உறுப்புக்களையும் பாதுகாக்கின்றது.

உடலுக்குள் எவ்விதமான அன்னிய பொருட்களும் உட்புகாதபடி பாதுகாக்கிறது. புற சூழ்நிலைக்கு ஏற்ப உடலின் வெப்ப நிலையை சீராக்குகின்றது சருமம் தான் ஒருவனுக்கு புற அழகைக் கொடுக்கிறது. கேற்றாற்போல் அடிப்பகுதியில் இருந்து புதிய செல்கள் மேல் நோக்கி வருகின்றன. இதனால் இப்பகுதி மிகுந்த பாதுகாவலனாக வேலை செய்கிறது. உதிரும் செல்களின் அளவு வருடத்திற்கு 4 கிலோ அளவு இருக்கும்.

மேலும் இதில் உள்ள மெலானின் என்ற நிறமிகள் சருமத்திற்கு நிறத்தைக்கொடுக்கின்றன. இந்த நிறமிகள் குறைந்தால் உடல் சிவந்து காணப்படும். இந்த மெலானின் நிறமிகள் சூரிய வெளிச்சத்தில் இருந்து வரும் புற ஊதாக் கதிர்களின்

# குடற்புண்

சென்றவாரத் தொடர்ச்சி...

இரைப்பு மற்றும் நடுக்கம் ஏற்படும். ஆகாரம் செல்லாது வாயில் நீர் ஊறிக் கொண்டே இருக்கும். நெஞ்சில் புகைச்சல் இருக்கும் தலைசுற்றல் மற்றும் தலைபாரம் இருக்கும்.

வாயு குன்மத்தில் உடல் உலர்ந்து காணப்படும்.கைகால் ஓய்ச்சல் இருக்கும் பலவீனமாக இருப்பவர்கள் வயிறு உப்பும் அடிவயிற்றில் பந்து போல் புரள்வது தெரியும்.சாப்பிட்ட ஆகாரம் சரியானபடி ஜீரணிக்காது வயிறு எப்போதும் பளுவாக காணப்படும்.

எரிகுன்மத்தில் உடல் முழுவதும் எரிச்சல் ஏற்படும் இளைக்கவும் செய்யும். வயிற்றில் எரிச்சல் குமட்டல் மற்றும் வயிறு உப்பிக்கொண்டிருக்கும். புளித்த ஏப்பம் எடுக்கும் ஆகாரம் சரிவர சாப்பிட முடியாது. வயிற்று போக்கு ஏற்படும். வாயில் நீர் ஊறும். தலை வலி, தலைச்சுற்றல், மயிர்க் காலில்வியர்வை மற்றும் இருமல் காணப்படும்.

அக்னி குன்மத்தில் அடி வயிற்றில் இரைச்சல் கேட்கும் மயக்கம் திடுக்கிடல் ஏற்படும் வயிற்றில் உஷ்ணம் ஏற்பட்டு வயிற்றுப் போக்கு உண்டாகும். நெஞ்சில் புகைச்சல் ஏற்படும் மூச்சுக்காற்று தங்கி எழும்பும்.

சக்தி குன்மத்தில் நடைகுறையும் பலவீனம் ஏற்படும் அடிக்கடி மயக்கம் உண்டாகும். சிறுநரம்புகள் புடைத்துக் காணப்படும் ருசி தெரியாது வாந்தி உண்டாகும். சிறு சிறு வலிகள் இருந்து கொண்டே இருக்கும் மலச் சிக்கல் ஏற்படும்.

வலி குன்மத்தில் மேனியெங்கும் உலர்ந்து காணப்படும். உடம்பில் இடுப்பு வலி, முதுகுத்தண்டு வலி, விலாவில் வலி போன்றவை ஏற்படும் தூக்கம் இருக்காது. வயிறு இரைச்சலுடன் ஊதிக்கொண்டே இருக்கும். ஆகாரம் சரியாக ஏற்காது. பொய்ப் பசி இருக்கும்.

மருந்துகள் அனைத்து வகை குன்மங்களுக்கும் நம் சித்தர்கள் நிறைய மருந்துகளை ஓலைச் சுவடிகளில் கூறியுள்ளனர் . அவரவர் உடற்கூறு மற்றும் வாழும் சூழல் மற்றும் குன்மத்தோடு சேர்ந்துள்ள மற்ற நோய்கள் என்ன என்று கண்டறிந்து அதற்குத் தக்கவாறு சிகிக்சை அளித்தால் மட்டுமே இந்த நோய் மட்டுப்படும்.

சுமார் 134 வகை மருந்துகள் குன்ம நோய்க்கு என வகைப்படுத்தியுள்ளனர். மருந்து உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய உணவு பழக்கங்கள் அதிக காரம், புளிப்பு, எண்ணெய் பலகாரங்கள், கறிப் பொருட்கள் நிறைந்த உணவை தவிர்க்க வேண்டும்.

நெய் உருக்கி, மோர் பெருக்கி அதாவது நெய்யை நன்கு உருக்கியும் மோரில் அதிக நீர் சேர்த்தும் சாப்பிட வேண்டும். தினமும் இரவில் பால் அருந்துவது நல்லது தேநீர், கோப்பி அருந்துவதை தவிர்ப்பது நல்லது.

மனக்கவலை, பரபரப்பு, மன உளைச்சல் இவற்றை குறைக்க வேண்டும் மணித்தக் காளிக் கீரை, முட்டைகோஸ் இவற்றை தினமும் சாப்பிடுவது நல்லது மணித்தக்காளிக் கீரை -1 கைப்பிடி, கொத்தமல்லித்தழை -1/2 கைப்பிடி, கறிவேப்பிலை -1/2 கைப்பிடி, சீரகம் 1ஸ்பூன், சின்னவெங்காயம் -4, இஞ்சி- 1 துண்டு இவற்றுடன் ஏதாவது காய்கள் சேர்த்து தேவையான அளவு உப்பு நல்ல மிளகு சேர்த்து சூப் செய்து தினமும் ஒரு வேளை காலை அல்லது மாலை அருந்தி வரவேண்டும்.


அல்லது காலை உணவுக்குப் பின்னும் மதிய உணவுக்கு முன்னும் 11 மணி முதல் 12 மணிக்குள் பித்த அபகாரம் கூடியிருக்கும் நேரத்தில் அருந்தி வந்தால் பித்த அப காரம் குறைந்து குடற்புண் பாதிப்புகள் குறையும்.

*நன்றி:- தமிழ் நாடு அரசு மருத்துவத்துறை*




இத்தகைய சிறப்பு வாய்ந்த தோலை மூன்று உட்பிரிவாக பிரிக்கின்றனர்.

- மேற்புறத்தோல்
- நடுத்தோல்
- உட்புறத்தேல்




### மேற்புறத்தோல்

நாம் கண்களால் பார்க்கும் வெளிப்பகுதி இது தான். இதன் மேல் ஏதேனும் ஒரு பொருள் பட்டால் உடனே மூளைக்கு தகவல் அனுப்பி கைகளை அந்தப் பகுதிக்குக் கொண்டுவரும் தூண்டல் சக்தியைக் கொண்டது. வெளிப்புறம் நுண்ணிய பொருட்கள் ஏதுவும் நுழையாவிடாமல் தடுக்கிறது.

இதன் மேற்புறத்தில் பலகோடி துளைகள் கண்ணுக்குத் தெரியாமல் உள்ளன. இதன் வழியாகத்தான் வியர்வை வெளிவரும்.

வெளிப்புறத்தோலில் பல கோடி செல்கள் உள்ளன. இவற்றின் மேற்பகுதியில் நிமிடத்திற்கு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் செல்கள் இறந்து உதிர்கின்றன. ஆனால் அதற் தாக்குதலிலிருந்து பாதுகாக்கிறது. தோலில் உருவாகும் புற்று நோயை தடுக்கிறது.

வெளிப்புறத்தோல் பகுதி தான் பல வகையான புறச் சூழ்நிலைக்கிருமிகளால் அலர்ஜி உறுகின்றன. இதனால் மேற்பகுதியில் வெண்புள்ளிகள், படர்தாமரை, தேமல் போன்ற வியாதிகளின் வெளிப்பாடு தெரியவருகிறது.

இப்பகுதியை தினமும் சுத்தம் செய்வது நல்லது. தினமும் இரண்டு வேளை குளிக்க வேண்டும். மென்மையான சோப்புகளை பயன்படுத்த வேண்டும் அதிக குளிர், அதிக சூடு உள்ள பகுதிகளுக்குச் செல்லும் போது அதன் தாக்கம் நேரடியாக சருமத்தை தாக்காத வண்ணம் ஆடைகளை பயன்படுத்துவது நல்லது.

இரசாயனக் கலப்படம் மிகுந்த பொருட்களை உபயோகிப்பது தவிர்த்து இயற்கைப் பொருட்களை உபயோகிப்பது மிகவும் சிறந்தது.

### நடுத்தோல்

இது கண்களுக்குத்தெரியாத பகுதியாகும். இதில் தான் உணர்வு நரம்புகள் முடிவடைகின்றன. இரத்த நாளங்கள் உள்ளன. எண்ணை சுரப்பி, வியர்வைச் சுரப்பிகள் அமைந்துள்ளன. வெளிப்புறத்தோலில் மற்றப் பொருட்கள் படுவதை இங்குள்ள உணர்வு நரம்புகள் அனிச்சை செயல் மூலம் மூளைக்கு உடனே தகவலை அனுப்புகிறது. உடனே கைகள் அங்கு செல்ல மூளை உத்தரவு விடுகிறது. இந்த நிகழ்வுகள் நொடியில் நிகழ்ந்து விடுகிறது. *(தொடரும்)*

# பிஜியின் முன்னாள் பிரதமர் பிணையில் விடுதலையானார்

(சுவா)

பிஜி நாட்டின் முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்ரி பிணையில் நேற்று முந்தினம் விடுவிக்கப்பட்டார்.

சட்டவிரோதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக சௌத்ரியும் அவருடைய ஆதரவாளர்கள் 5 பேரும் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டனர். கடந்த 3 நாட்களாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர்கள் தலைநகர் சுவாவில் உள்ள நீதிமன்றத்தில் திங்கட்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் அனைவரையும் பிணையில் விடுதலை செய்ய நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 1999 இல் அங்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்திய வ்ம்சாவளியைச் சேர்ந்த மகேந்திர சௌத்ரி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், 2006 இல் நடைபெற்ற இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி கைமாறியது. அதன் பின்னர் சௌத்ரி மீது ஊழல், வருமான வரி ஏய்ப்பு உட்பட பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த வழக்குகளை சட்ட ரீதியில் சந்திப்பேன் என்று சௌத்ரி உறுதிபட தெரிவித்தார்.

சௌத்ரியின் கைது மனித உரிமை மீறல் என்று கண்டனம் தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கெவின், பிஜியில் ஜனநாயகம் திரும்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)




# சீனாவில் விவாகரத்து அதிகரிப்பு

(பீஜிங்)

சீனாவின் அபரிமித பொருளாதார வளர்ச்சி மற்றும் குழந்தைப்பேறு குறைதல் போன்றவற்றால் அங்கு விவாகரத்து எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்கிறது. சீனா சமீப காலமாக பொருளாதாரத்தில் அசுர வேகத்தில் முன்னேறி வருகிறது. உலகளவில் தற்போது பொருளாதார வளர்ச்சியில் சீனா இரண்டாமிடத்தில் இருக்கிறது. இதன் காரணமாக அங்கு சமுதாயத்தில் பல்வேறு நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன.

அவற்றின் மூலம் பல பிரச்சினைகள் பெரிதாகின்றன. இந்த ஆண்டில் ஆறு மாதங்களில் மட்டும் 8 இலட்சத்து 48 ஆயிரம் தம்பதியர் சீனாவில் விவாகரத்து கோரி விண்ணப்பித்துள்ளனர். சீன சுயாட்சிப் பகுதியான ஜிங்ஜியாங் உள்ளிட்ட ஒட்டுமொத்த நாட்டில் விவாகரத்து கோருவோர் எண்ணிக்கை 10 சதவீதம் அதிகரித்துள்ளது. அதில் சோங்கிங் மாநகராட்சி முதலிடம் பிடித்துள்ளதாக சீனா டெய்லி பத்திரிகை கூறுகிறது.

இதில் ஷாங்காய் ஆறாமிடத்திலும் பீஜிங் எட்டாமிடத்திலும் உள்ளன. கடந்த 2005 இல் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை ஆண்டுக்கு 7.6 சதவீதம் விவாகரத்து கோருவோர் எண்ணிக்கை அதிகரித்ததாக அந்நாட்டு மக்கள் விவகாரத்துறை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2009 இல் மட்டும் 24 இலட்சத்து 70 ஆயிரம் பேர் விவாகரத்து பெற்றுள்ளனர். ஷாங்காய் சமூக அறிவியல் அகடமி ஆராய்ச்சியாளர் ஜு ஆன்க்கி கூறியதாவது,

திருமணப் பதிவுச் சட்டம் திருத்தப்பட்ட பின் கடந்த 2003 இல் இருந்து மக்கள் விவகார தகவல் குழு அலுவலகங்கள் மூலமோ நீதிமன்றம் மூலமோ விவாகரத்து பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்துள்ளது.

தம்பதியருக்குள் அனுசரித்து இணங்கிப் போகும் தன்மை குறைந்து கொண்டே செல்வது தான் இப்பிரச்சினையின் மூலகாரணம். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிப்பதால் தம்பதியருக்கிடையில் இணக்கம் குறைகிறது. வேலை காரணமாகவும் திருமணத்தின் பின் வேறு வழிகளில் வைத்திருக்கும் தொடர்புகள் காரணமாகவும் விவாகரத்து அதிகரிக்கிறது.

பெற்றோரை விட்டு விலகியிருப்பதால் அவர்களின் ஆலோசனை மற்றும் தலையீடு இல்லாமல் போவது கூட தம்பதியரின் அனுசரிப்புக் குறைந்து போவதற்கு காரணமாக இருக்கிறது. குழந்தையின்மையும் ஒரு காரணம். ஷாங்காயைப் பொறுத்தவரை குழந்தையின்மைப் பிரச்சினைதான் இங்கு விவாகரத்து அதிகமாவதற்கு காரணமாக இருக்கிறது என்று ஜு கூறினார். (ஸ்ரீ-




ஆசிய-ஐரோப்பிய தலைவர்களின் உச்சி மாநாட்டில் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸி (இடது), பின்லாந்து பிரதமர் மேரி கிவினிமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாகிஸ்தானில் அமெரிக்க ஏவுகணை தாக்குதலில் 8 ஜெர்மனிய தீவிரவாதிகள் பலி

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வடக்கு வர்கிஸ்தான் மலைப்பகுதியில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகள் மீது அமெரிக்க இராணுவம் ஆளில்லா விமானங்கள் மூலம் ஏவுகணை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் மிராஸி புறநகர் பகுதியில் 2 ஏவுகணைகளை வீசித் தாக்குதலை நடத்தியது.

அவை அங்குள்ள மசூதி அருகே இருந்த ஒரு கட்டடத்தை தாக்கியன. இதில் 8 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதுடன் 2 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வருகிறது.

இவர்கள் அனைவரும் ஜிகாத்-அல்-இஸ்லாமி என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள். கட்டடத்தில் அனைவரும் கூடி சதி ஆலோசனையில் ஈடுபட்டிருந்த போது ஏவுகணைத் தாக்குதலில் பலியாகியுள்ளார்.

பெரும்பாலும் இவர்கள் ஆப்கானிஸ்தானில் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். பாகிஸ்தானில் மலைப்பகுதிக்குள் வந்து தங்கள் இயக்கத்தினரை அவ்வப்போது வந்து சந்தித்து செல்வது வழக்கம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு சித்திக் உள்ளிட்ட 10 பேர் ஜெர்மனியில் உள்ள ஹம்பர்க் நகரில் இருந்து புறப்பட்டு பாகிஸ்தான் மலைப் பகுதிக்கு வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் அல்-கொய்தாவைச் சேர்ந்தவர்கள். பின்னர் ஜிகாதிகள் மற்றும் தீவிரவாதிகளுடன் சேர்ந்து ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு படைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஜெர்மனியின் உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



ஆசிய-ஐரோப்பிய தலைவர்களின் உச்சி மாநாடு பெல்ஜியத்தின் தலைநகர் பிரசெல்ஸில் நடைபெற்றது. பிரிட்டன் துணைப்பிரதமர் நிக்கிளிக் (இடது), பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் மக்தூம் முகமது குரோஷி ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

# கியூபாவில் கடும்பொருளாதார நெருக்கடி; ஐந்து இலட்சம் பேர் வேலையிழப்பு

(ஹவானா)

அமெரிக்கக் கண்டத்திலேயே கம்யூனிசம் கோலோச்சும் நாடான கியூபா இப்போது கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இதனால் ஒக்டோபர் தொடங்கி மார்ச் வரையில் படிப்படியாக 5 இலட்சம் ஊழியர்கள் அரசுப் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று அரசு அறிவித்து விட்டது. விடுவிக்கப்படும் 5 இலட்சம் பேரும் சொந்தமாக சிறு தொழிலோ சில்லறை வியாபாரமோ செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்று அரசு அறிவித்திருக்கிறது.

சோவியத் யூனியன் என்ற வல்லரசு இருந்தவரை பல கம்யூனிஸ்ட் நாடுகளின் உண்மையான பொருளாதார நிலைமை என்னவென்றே உலகுக்குத் தெரியாமல் இருந்தது. எனவே, எல்லா கம்யூனிஸ்ட் நாடுகளுமே ஐந்தாண்டு திட்டங்களுடன் வளர்ச்சியை நோக்கி நடைபோடுவதாக நம்பப்பட்டது.

கம்யூனிஸ்ட் நாடுகளில் அனைவருக்கும் கல்வி, இலவச சுகாதார வசதி, வீட்டு வசதி மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவை அளிக்கப்படுவதாக செய்யப்பட்ட பிரசாரங்களின் காரணமாக நம் நாட்டிலும் ஏன் கம்யூனிசம் வரக்கூடாது என்றே பல நாடுகளின் வாலிபர்களும் கனவு கண்டனர். ஆனால் கம்யூனிஸ்ட் அரசுகளின் மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் காரணமாகவும் இராணுவ ரீதியாகத் தங்களை பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கருதி அதற்கு அதிக நிதியைச் செலவிட்டதாலும் உற்பத்தி சார்ந்த பொருளாதாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு அரசின் அரசியல் சமுதாய திட்டங்களுக்கு முன்னுரிமை தரப்பட்டது.

அத்துடன் அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளுடன் அடிக்கடி சித்தாந்த மோதல்களில் ஈடுபட்டதாலும் வறட்சி -வெள்ளம் - நில நடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர் காலங்களில் அமெரிக்கா தர முன்வந்த உதவிகளை மறுத்ததாலும் கியூபாவின் பொருளாதாரம் வெகுவாக ஆட்டம் கண்டிருக்கிறது.

சித்தாந்த ரீதியாக தங்களுக்கு எதிரி என்பதால் அருகிலேயே இருந்தும்கூட அமெரிக்காவிடம் எந்தவித உதவியையும் பெறாமல் வீம்பு காட்டியது கியூபா. இந்தக் காரணங்களால் கியூபாவில் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள, ஆட்குறைப்பு தான் ஒரேவழி என்று அரசு தீர்மானித்திருக்கிறது.

இதில் வேதனை என்னவென்றால் கியூபாவில் வேலைக்குப் போகிறவர்கள் அனைவருமே அரசு ஊழியர்கள்தான். அவர்கள் அந்த வேலையிலிருந்து விலகினால் மாற்று வேலைக்கு எங்கே போவது என்ன செய்வது என்று புரியாமல் விழிக்கிறார்கள்.

கிளாரா வயது (39) என்ற பொறியியலாளரின் கணவர் பெட்ரா வயது (42). இருவருடைய வருமானமே குடும்பத்துக்குப் போதவில்லை. இந்த நிலையில் வேலையை விட வேண்டியிருக்கும் என்று கிளாராவுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுவிட்டது. கணவர் பெட்ராவைவிடத் தனக்குத்தான் சம்பளம் அதிகம் என்பதால் வேலை இழப்பு குறித்து அதிகமாகவே கவலைப்படுகிறார். 178 வீதமான சிறு தொழில்கள், வியாபாரங்களில் மக்கள் ஈடுபடலாம் என்று அரசு அறிவித்திருக்கிறது.

இதற்கு முன் இந்த வேலைகள் கூட அரசு ஊழியர்களால்தான் செய்யப்பட்டு வந்தன என்று இதிலிருந்து தெரிகிறது. புதிதாக எப்படி வியாபாரத்தையும் தொழிலையும் கற்றுக் கொண்டு செய்வது என்பதே பெரும்பாலான அரசு ஊழியர்களின் கேள்வியாக இருக்கிறது.

இதனால் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் குடும்பங்கள் இப்போதே தூக்கம் இல்லாமல் தவிக்கின்றன. மக்கள் இதையெல்லாம் தாங்கிக்கொள்ள வேண்டும். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வது எப்படி என்பது குறித்து சிந்திக்க வேண்டும் என்று கியூபா கம்யூனிஸ்ட் கட்சி கருத்து தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)



சப்ரகமுவா மாகாணப்பணியாளரும்,மாவனல்ல வலயப்பணிமனையும் யாழ். கல்வி வலயமும் இணைந்துநடாத்திய சமாதான யாத்திரா கலாசார நிகழ்ச்சி நேற்று கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தி னர்கள் அழைத்து வரப்படுவதையும்,பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும் மாவனல்ல வலய பணிமனை அதிகாரி எம்.ஆர்.சி.சந்திராவதி மினிக்கே,யாழ். மாவட்ட சிவில் விவகார மக்கள் தொடர்பு அதிகாரி மேஜர் பண்டார ஆகியோர் உரையாற்றுவதையும் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களின் வரவேற்பு நடன நிகழ்வு மற்றும் மாவனல்ல வலயப்பணிமனை மாணவர்களின் வரவேற்பு நடன நிகழ்வுகளையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :-எஸ்.கரன்)

# பொன்சேகாவின் விடுதலை கோரி கையெழுத்து வேட்டை ஆரம்பம்

(கொழும்பு)

சரத்பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி பொதுமக்களிடம் கையெழுத்து பெறும் செயற்திட்டம் நேற்று எதிர்க்கட்சிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கையெழுத்து வேட்டை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமானது.

இந்த கையெழுத்து வேட்டை நிகழ்வில் முன்னாள் இராணுவத் தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் கரு ஜயசூரிய உட்பட ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உட்பட ஜனநாயக மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் அரசியல் தலைவர்களான சிறிதுங்க ஜயசூரிய, விக்கிரமபாகு கருணாரத்த உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த கையெழுத்து வேட்டையைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகையில், வன்னியில் விடுதலைப்புலிகளை முற்றாக ஒழித்து நம்மை அச்சமின்றி சுதந்திரமாக நடமாட வைத்த இராணுவ வீரன் இன்று சிறையில் முடக்கப்பட்டுள்ளதாக கூறினார். (ஸ்ரீ-2)

# வீதி அகலமாக்கும் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(கரவெட்டி)

யாழ். பருத்தித்துறை வீதிகளில் வீதி அபிவிருத்தித்துறையினரால் நடைபெற்று வரும் வீதி அகலமாக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும் என்று பொதுமக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருவகால மழை ஆரம்பித்த நிலையில் இவ் வீதிகளில் இரு பக்கங்களிலும் தோண்டப்பட்டுள்ள வாய்க்கால்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இதனால் இப்பாதையால் பயணம் செய்யும் வாகனங்கள் மற்றும் பயணிகள் வீதி எவ்வாறு உள்ளதென்று தெரியாத நிலையில் பயணம் செய்யும் போது வாகன நெரிசல்கள் அதிகரித்து விபத்துச்சம்பவங்கள் ஏற்படுகின்றது. இதனால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதைக்கருத்தில் கொண்டு வீதியை அகலமாக்கும் பணிகளில் ஈடுபடுகின்ற மற்றும் புனரமைப்பு செய்கின்ற நிறுவனங்கள் உரிய வேலைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறும் இதற்கான உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் பொதுமக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2-24)

# வடபகுதியில் முதலிடுவது குறித்து அமெ. வர்த்தகர்கள் ஆராயவுள்ளனர்

அமெரிக்க வர்த்தக தூதுக்குழு ஒன்று விரைவில் வடக்கே விஜயம் செய்யவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இந்தத் தூதுக் குழுவில் 60 வர்த்தகப் பிரமுகர்கள் இடம்பெறவுள்ளதாகவும் இவர்கள் எதிர்வரும் 12ஆம் திகதி வட மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐம்பது அமெரிக்கர்களையும் பத்து அமெரிக்க வாழ் இலங்கையர்களையும் கொண்ட இந்த உயர் மட்ட வர்த்தகத் தூதுக்குழு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள முதலீடு தொடர்பான செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ள இவர்கள் வட மாகாணத்திற்கும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.யாழ்ப்பாணம் உட்பட பல்வேறு பகுதிகளுக்கு அழைத்து செல்லப்படும் அமெரிக்க வர்த்தக தூதுக்குழு வடபகுதியில் முதலீடுகள் செய்வது குறித்து விரிவாக ஆராயப்படும் என ஆளுநர் குறிப்பிட்டார். அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஏற்பாட்டிலேயே இந்தத் தூதுக்குழு இலங்கைக்கு வருகை தரவுள்ளது.(ஸ்ரீ-2)


## பனை அபிவிருத்திச் சபை

**வேண்டுகோள்......**

பனைமரங்கள் தறித்தல், அழித்தல், பனை மரக்காலை அமைத்தல் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபடும் மக்களுக்கு பனை அபிவிருத்திச் சபையால் விடப்படும் வேண்டுகோள்.

01. மேற்படி செயற்பாட்டினை மேற்கொள்ள உங்கள் மக்கள் தங்களின் தேவையை விளக்கும் விண்ணப்பத்தினை தங்கள் பகுதி கிராம அலுவலர் ஊடாக பிரதேச அலுவலரின் அனுமதி பெற்று, பனை அபிவிருத்தி சபையிடம் அனுமதி பெற்றுத் தறித்தல் அல்லது அழித்தல் வேண்டும்.
02. பனை தறிக்கப்படும் நிலத்திலேயே தேவைப்பயன்பாடு உள்ளதா அன்றில் வேறு ஒரு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றதா? எடுத்துச் செல்லப்படுவதாயின் பாதைக்கான முன் அனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்.
03. தறிக்கப்படும் பனை மரம் ஒவ்வொன்றிற்கும் ரூபா இருநூறினை (200/- ) பனை அபிவிருத்தி சபைக்குச் செலுத்தி இரசீதினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
04. பனைமரக்காலை உரிமையாளர்கள் காலைக்கான அனுமதிக்குரிய சிபார்சினை பனை அபிவிருத்திச் சபையிடம் பெற்றிருத்தலுடன், பனை தறிப்பதாயின் பனை நடுகையில் ஒரு பகுதிச் செலவீனத்தினையும் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

(சி-1348)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அங்கத்தவரான

**செல்வி ஒஸ்மன் தேவதாஸ் டயாணி**

அவர்கள் விழிப்புலனற்றோர்கள் மத்தியில் எடுத்துக்காட்டாய் யாழ். பல்கலைக்கழகத்தில் பொதுக் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றமையினைப் பாராட்டி வாழ்த்தி பெரு மகிழ்வடைகிறோம்.

அவருடைய கல்விக்கு உறுதுணை புரிந்தவர்களையும் இவ்வேளையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்,
நிர்வாகிகள்,
அங்கத்தவர்கள்,

(இ)

ஒரே ஒரு மொழிதான் உண்டு. அது அன்பு, மனச்சாட்சி, இரக்கத்தோடு பேசும் இதய மொழி.

~ சத்ய சாயிபாபா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மாலையுடன் மேடையில் இருக்கும் ஆசிரியரின் மனம் பேசுகிறது...

ஆசிரியர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. வித்தை கற்றுத் தந்த குருவை எந்நாளும் நெஞ்சிருத்தி வணங்கும் நடைமுறைகளில் ஏற்பட்ட பஞ்சம் ஆசிரியர்களுக்கும் ஒரு தினம் என்ற நாள் ஒதுக்கீட்டைக் கொண்டு வந்தது.

அந்த நாள்தான் இந்த நாள். இந்நாளில் மாலை மரியாதையுடன் அலங்கார மேடையில் ஆசிரியர்கள் இருப்பர்.

இந் நேரத்தில் ஆசிரியர் ஒருவரின் மனம் மௌனமாய் பேசுகிறது...

இடமாற்றத்துன்பம், வேலைப்பளுவின் தாங்கொணாச்சுமை, வளர்ந்த மாணவர்களின் கிண்டல் கிறுக்கல், உயர் அதிகாரிகளின் அதட்டல், வெருட்டல், அதிபரின் கடும்சினம், பெற்றோர்களின் எழுந்தமான பேச்சுக்கள் மற்றும் மந்திர உச்சாடனங்கள் என இவை யாவற்றிற்கும் தோஷ பரிகாரம் செய்து ஆசிரியர்களை மிகவும் புதுப் பொலிவுடன் கீர்த்தி மிக்க- சக்தியுடையவர்களாக ஆக்குவதற்காக நடத்தப்படும் மகாகும்பாபிஷேகமும் ஆராதனையுமே ஆசிரியர் தினமாகும்.

அதிகாலையில் எழுந்து கொட்டும் பனியில் நனைந்து புதிதாய் மலர்ந்த பூக்களைப் பறித்து பூமாலை புனைந்து தன் ஆசிரியத் தெய்வங்களுக்கு மாலை சூட்டும் அந்த மாணவச் செல்வங்களின் அன்பை, பக்தியை ஒருகனம் சிந்தித்துப் பார்த்தால் நெஞ்சம் கூச்செறியும்.

ஓ! கடவுளே நான் எனது கடமையை சரியாகச் செய்தேனா! என் ஆசிரியர் என்னை வழிப்படுத்தியமையால் நான் இன்று ஆசிரியராகப் பணியாற்றுகின்றேன். என் ஆசிரியர் எனக்கு ஆற்றிய பணியின் இரட்டிப்பான சேவையை நான் ஆற்றுகிறேனா? இந்தக் கேள்விகளை நெஞ்சோடு ஒட்டிக்கொள்ளும் மாலையின் பூவிதழ்கள் சுண்டி விடும்.

இந்தக் கேள்விக்கு என் பதில் சாதகமாக அமையும் போதே மனம் ஆறுதலடையும். சமாளிப்புக்காக வேனும் என் ஆசிரியப் பணியின் புனிதத்தை மறந்து இது போதும் என்று நான் நினைப்பேனாயின் என் நெஞ்சை நானே சுட்டுக் கொள்வதாக முடியும்.

ஓ! என் மாணவச் செல்வங்களே, உங்களிடம் கல்வியின் பெயரால் காசைப் பறிப்போர் பலர். அந்தக் காசு இல்லாததால் அப்துல் கலாமின் இடத்தைப் பிடிக்கக் கூடிய உங்கள் திறமைக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போன துயரம் ஏராளம்.

ஏன் இப்படி! இலவசக் கல்வி, இலவசப் பாடப்புத்தகம், இலவசச் சீருடை, இலவச மதிய உணவு என எல்லாமும் இலவசம். அப்படியானால் உங்கள் திறமைக்கு களம் அமைப்பது என்னுடைய பொறுப்பல்லவா!

எழுதவும் வாசிக்கவும் தெரியாமல் ஒருபகுதி மாணவர். தரம் ஐந்தில் புலமைப்பரீட்சையில் எழுபது புள்ளிகளை தாண்டமுடியாமல் இன்னொரு பகுதி.

பதினொரு ஆண்டுகள் கற்று க.பொ.த(சா) தரத்தில் சித்தியடையாமல் வெளியேறும் மாணவர் மற்றொரு பகுதி. ஆ! கடவுளே க.பொ.த உயர் தரத்தில் மூன்று பாடமும் சித்தியில்லை என்ற சோகச் செய்தியுடன் பதின்மூன்று ஆண்டுகால பாடசாலைக்கல்விக்கு குடமுழுக்குச் செய்யும் மாணவர் மறுபகுதி.

இதற்கெல்லாம் யார் காரணம். இந்தச் சிந்தனை சிதற மாலையுடன் அரங்கை விட்டு ஓட வேண்டும் போல் ஓர் உணர்வு.

அந்த உணர்விலும் ஓர் உறுதி. ஆசிரியப் பணியை பாக்கியமாகக் கருதி என் கடமையை அர்ப்பணிப்போடு செய்வேன்.

இது உறுதி. இது சத்தியம். இந்தச் சத்தியம் சாத்தியமாகும் என்ற நம்பிக்கையோடு மனம் ஆறுதலடைகிறது.

## யுத்தத்தால் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய மஹாளயபட்சத்தில் பிதிர்க்கடன் செய்வோம்

இந்துக்களால் ஆற்றப்படும் கிரியைகளில் சிரார்த்தக் கிரியைகளும் முக்கியத்துவப்படுகின்றன. இறந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக பிள்ளைகள் மற்றும் உறவினர்களால் ஆற்றப்படுகின்ற இச்சிரார்த்தக் கிரியைகளில் சிறப்புக்குரியதாக ''மஹாளயம்'' கைக்கொள்ளப்படுகின்றது. மற்றைய சிரார்த்தக்கிரியைகள் யாவும் குறிப்பிட்ட ஒருவரை மட்டும் எண்ணியே ஆற்றப்படுகின்றது. ஆனால் மஹாயள சிரார்த்தமானது ஒருவர் தனது தாய் அல்லது தந்தை அல்லது உறவினர் என மட்டுமல்லாது எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள், அநாதரவானவர்கள் என இறந்த தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் அனைவரதும் ஆன்ம ஈடேற்றத்திற்காக ஆற்றப்படுவதே இதன் சிறப்பம்சமாகும். அந்தவகையில் இவ்வருடம் குறிப்பாக யுத்தத்தினால் மரணம் அடைந்த மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக இந்துக்களாகிய நாங்கள் ஒவ்வொருத்தர்களும் தங்கள் தங்கள் இல்லங்களில் மஹாயள சிரார்த்தக் கிரியை செய்யும் போது காருண்ய பிண்டம் என கூறப்படும் சந்தர்ப்பத்தில் யுத்தத்தினால் மரணம் அடைந்த மக்களை எண்ணி ஓர் பிண்டத்தினை வைத்தும், அவர்களின் பெயரால் தர்ப்பணமும் (எள்ளும் தண்ணீரும்) செய்தும் வழிபாடாற்றுதல் இந்து தமிழ் மக்கள் ஒவ்வொருத்தருடைய மேலான கடமையாகும். அத்துடன் இவ்வேளையில் ஆலயங்களிலும் விஷேட ஆத்மசாந்தி

### நாளை அமாவாசையுடன் மஹாளய பட்சம் நிறைவு பெறுகின்றது

வழிபாடுகளில் ஈடுபட்டு சிவகதிக்காக எமக்கு கிரியைகள் ஆற்ற எவரும் இல்லையே என ஏங்கும் இறந்த மக்களுக்காக பிராத்தனையில் ஈடுபட்டு அவர்களின் ஆன்மாவை அமைதியுறச் செய்வோம்.

இம்மஹாயள சிரார்த்தம் நாளை அமாவாசையுடன் நிறைவடைகின்றது. இக்காலத்தில் யுத்தத்தினால் மரணம் அடைந்த எம்மக்களின் மோட்சத்திற்காகவும் இறந்த தங்களுடைய தாய், தந்தையர்களது மோட்சத்திற்காகவும் தவறாது பிரார்த்தனை செய்து பிதிர்கள் என்று சொல்லப்படும் தென்புலத்தாரது வாழ்த்துதலையும் ஆசிர்வாதங்களையும் பெற்று நாமும் இவ்வையகத்தில் நலமுற வாழ்வோமாக.

சிவஸ்ரீ.சபா.வாஸுதேவக்குருக்கள்

## ஆசிரியர் தின விழா

### அன்புத் தெய்வங்களே – வாழ்த்துக்கள்

இன்னல் மத்தியிலும்
புன்னகை உம்முகத்தில்
சோகத்தினுள்ளும்
சோம்பலில்லை உம் உழைப்பில்
மழலைகள் தோட்டத்து
இளங் காவலரே
குழந்தைத் தெய்வ
அழகு சந்நிதியின்
அர்ச்சகர்கள் நீங்களே
வன்னியில் வந்துதித்த
அன்புத் தெய்வங்களே
முன்பள்ளி ஆசிரியர்களே
நன்நாளிதில் வாழ்த்துக்கள்

செ.செல்வதாஸ்

### தெய்வீகப்பணியான ஆசிரியப்பணி போற்றுவோம்

எண்ணும் எழுத்தும் கண்ணெனப்போற்றி
ஏற்றநற்கலைகள் பலவும் புகட்டி
மண்ணில் எவ்ரும் மதித்திடும் வண்ணம்
பண்பாக வாழச் செய்பவன் ஆசான்
உயர்வைத் தந்திடும் நல்வழிகண்டு
தெய்வப்பணிஇதுவென்று மதித்தே
ஐயமிலாது அவரவர் ஊக்கமறிந்து
உய்ய நன்நெறி ஊட்டுவான் ஆசான்
ஆசானின் நற்பணி போற்றிடுவோம்
ஆக்கப்பணியால் யாவரும் உய்வோம்
உலகமே உயர்த்திடும் புனிதசேவை
உத்தம ஆசிரியர் நற்பெரும் பணியே

நீர்வைமணி

### நல்லாசிரியர்

அறிவைப் பெருக்கி ஆற்றலை விருத்தி செய்து
திறனை வளர்த்து தேர்ச்சியைப் பெற்று
காலமெல்லாம் கற்று கற்பித்தலை சிறப்பித்து
கலங்கரை விளக்காக காலமெல்லாம் திகழ்ந்திடுவீர்
அகந்தையை அடக்கி அன்பினை வளர்த்து
பகுத்தறிவுடன் சிந்தித்து பாண்டித்தியமடைந்து
பண்பினைப் பேணி பணிவுடன் நடந்து
ஆசிரியருடன் அகமகிழ்ந்து வாழ்ந்திடுவீர்
குணநல உள்ளீடுகளை சுயநலமின்றி உபயோகித்து
கற்பித்தல் சாதனங்களோடு விளங்கிட கற்பித்து
தேர்ச்சிமட்டத்தில் தேர்ச்சியடைய வைத்து
கணிப்பீட்டினூடாக மதிப்பீட்டினை மேற்கொண்டிடுவீர்
சித்திரங்கள் வரைந்து சிற்பங்கள் செதுக்கி
கட்டுரை எழுதி கவிதைகள் புனைந்து
கணனியை பயின்று கையிற்குள் உலகினையடக்கி
புத்தாக்கம் செய்து புதியன படைக்க வைத்திடுவீர்
சுற்றுலா அழைத்துச் சென்று சிந்தனையை வளர்த்து
சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்து
சத்துணவுகளை சுகாதாரமாக சமைத்து
நோய் நொடியின்றி நீடுழி வாழ வைத்திடுவீர்
அண்டவெளிப் புதினங்கள் ஆழ்கடல் அற்புதங்கள்
விஞ்ஞான விந்தைகள் விறுவிறுப்பூட்டும் செய்திகள்
தொழில்நுட்ப சாதனைகள் தொழில்முயற்சிகள்
இணையத்தளத்தில் பெற மாணவர்களுக்கு
வழிகாட்டிடுவீர்
உடற்பயிற்சியினால் உடலுக்கு உரமேற்றி
இசைப்பயிற்சியினால் உளத்துக்கு மகிழ்வூட்டி
சமநிலையாளுமையைப்பேணி தலைமைத்துவத்தை
வளர்த்து
சவாலை எதிர்த்து சாதனை படைக்க வைத்திடுவீர்
மாணவர் மனதைப் புரிந்து மகிழ்ச்சியை ஊட்டி
சிந்தனையை கிளறி சிரிக்க வைத்து
ஆராய்ச்சியை தூண்டி ஆய்வுக்கு வழிகாட்டி
நிபுணத்துவராக்கி மாணவர் போற்றும் நல்லாசிரியராக
திகழ்ந்திடுவீர்

க.கோவிந்தராசா
ஆசிரியர்
யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்

## பொலிஸ் நிலையங்களில் உள்ள காலாவதியான வெடிபொருட்களை அழிக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

நாட்டின் சகல பொலிஸ் நிலையங்க ளிலும் காணப்படும் காலாவதியான வெடி பொருட்களை அழித்துவிடுமாறு பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் இடம் பாரிய வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

பொலிஸ் நிலையங்களில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள வெடிபொருட்கள் தொடர் பில் நிலையங்களுக்குப் பொறுப்பான அதிகா ரிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அனுராதபுர பொலிஸ் நிலையத்தில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்த கைக்குண்டுகள் ,ஜொனிகுண்டுகள், கண்ணி வெடிகள், மோட்டார் குண்டுகள் ,துப்பாக்கித்தோட்டாக்கள் உள்ளிட்ட பெருமளவு வெடிபொருட்கள் நேற்று முன்தினம் அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் பாதுகாப்பான முறையில் குண்டுகள் அழிக்கப் பட்டதாக குறிப்பிடப்படு கிறது. (ஸ்ரீ-2)

## ஆசிரியர்தின விழா

(இருபாலை)

யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மாணவர் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி.ரதி.ஜெயராசா கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-4-136)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



எப்போது தொல்லை தோன்றினாலும் ''நீ மாயை. வெறும் தோற்றம். உண்மை அல்ல என்பது எனக்குத் தெரியும்'' என்று சொல்ல வேண்டும். பலநிற மேகங்கள் வானத்தை மறைக்கின்றன. அவை ஒரு நிமிடம் நின்றபின் தங்கள் வழியே போய்விடுகின்றன. ஆனால் என்றும் நிலையாக உள்ள நீலவானம் அங்கேயே விரித்த வண்ணம் இருக்கிறது.

வானம் என்றும் மாறுவதில்லை. தோன்றித்தோன்றி மறைபவை மேகங்களே. அதுபோலவே நீங்கள் என்றும் குறைவற்றவர்களே. உங்களுக்கு அழிவோ மாறுதலோ கிடையாது.

# அயோத்தி பிரச்சினையை பேசித் தீர்க்க மத நல்லிணக்க அமைப்பு ஆர்வம்

அயோத்தி பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க அந்த வழக்கில் சம்பந்தப் பட்ட தரப்பினர் முன்வரவேண்டும்.குறிப்பாக முஸ்லிம்கள் இந்த விவகாரத்தில் சாதகமான முடிவை எடுக்க வேண்டும் என அமைதி மற்றும் மத நல்லிணக்கத்திற்காக பாடுபடும் அமைப்பு ஒன்று அழைப்பு விடுத்துள்ளது.


அமைதி மற்றும் அமைப்பின் தலைவர் மவுலானா ஜாகீர் அகமது சித்திக் கூறிய தாவது,

அயோத்தி சர்ச்சை நிலம் தொடர்பாக அல காபாத் மேல் நீதிமன்றத்தின் லக்னோ பெஞ்ச் வழங்கிய தீர்ப்பை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்க மேல்நீதிமன்றம் ஒரு தங்கமான வாய்ப்பை வழங்கியுள்ளது.அயோத்தி வழக்கில் தொடர்புடைய அனைவரும் உண்மையிலேயே முயற்சி மேற்கொண்டால் உயர்நீதிமன்றத்தை அணுக வேண்டிய தேவையே இருக்காது.சுமூகமான முறையில் இப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என அகமது சித்திக் கூறினார்.

இதற்கிடையில் அயோத்திப் பிரச்சினையில் சுமூகத் தீர்வு காண்பதற்காக இந்து , முஸ்லிம் மதத் தலைவர்கள் 15 நாட்களுக்குள் அயோத்தியில் உள்ள அனுமன் கோயில் அருகே சந்தித்துப் பேசுவர் என இராம ஜென்மபூமி விவகாரத்தில் வழக்குத் தொடர்ந் தவர்களில் முக்கிய நபரான முகமது காசிம் அன்சாரி கூறியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் கூறியதா வது,

இந்து முஸ்லிம் தலை வர்கள் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யும்படி அகில இந்திய முஸ்லிம் தனிச்சட்ட வாரியமும் சன்னி மத்திய வக்ப வாரியமும் எனக்கு அனுமதி அளித்துள்ளன. மதத்தலைவர்களின் கூட் டத்திற்குப் பின் தான் உயர் நீதிமன்றத்தை அணுகு வது குறித்து முடிவ செய்யப்படும். அலகா பாத் மேல்நீதிமன்ற தீர்ப்புக் குறித்து முஸ்லிம் தனிச்சட்ட வாரியம் லக்னோவில் எதிர்வரும் 9 ஆம் திகதியும் டில்லியில் எதிர்வரும் 16 ஆம் திகதியும் ஆலோ சனை நடத்துகிறது என அன் சாரி கூறினார்.



அதேநேரத்தில் நிர்மோகி ஆதார அமைப்பின் மகந்த் பாஸ்கர் தாஸ் கூறுகையில், அலகாபாத் மேல்நீதிமன்றத்தின் தீர்ப்பு எங்களுக்கு முழுதிருப்தி அளிப்பதாக இல்லை. சீதா ரசோய், ராம் சபுத்ரா மற்றும் பந்தர் கார் போன்றவை ஏற்கனவே நிர்மோகி அகாரா வசம் உள்ளன. நாங்கள் ராம்லாலா அமைந் துள்ள இடத்திற்குத் தான் உரிமை கோரினோம். அது கிடைக்கவில்லை. ராம்லாலாவில் பூஜைகள் மற்றும் அர்ச்சனைகள் செய்யவும் உரிமை கோரி பெறுவோம் என்றார்.

இதற்கிடையில் அயோத்தி சர்ச்சை நிலம் வழக்கில் தீர்ப்பு வழங்கிய மூன்று நீதிபதிகளில் ஒருவரான நீதிபதி தரம்வீர் சர்மாவுக்கு அயோத்தியில் உள்ள மத தலைவர்கள் பாராட்டு விழா நடத்த தீர்மானித்துள்ளனர். சாதுக்களும் சன்னியாசிகளும் இந்த விழாவை நடத்துவர். சர்மாவுடன் கலந்து பேசிய பின் விழா நடக்கும் திகதி முடிவு செய்யப்படும்.

சர்மா ஓய்வு பெற்றுவிட்டதால் அவருக்கு பாராட்டு விழா நடத்தப்படுகிறது. தீர்ப்பு வழங்கிய மற்ற இரண்டு நீதிபதிகளும் ஓய்வு பெறும் போது, அவர்களுக்கும் பாராட்டு விழா நடத்தப்படும் என ராம்விலாஸ் வேதாதி கூறினார். (ஸ்ரீ-2)

# அ.தி.மு.க.கூட்டணியில் விஜயகாந் இணைய வேண்டும்

## கிருஷ்ண சாமி கோரிக்கை

விஜயகாந்த் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக்கொள்ள வேண்டும் என புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறியுள்ளார். நேற்று மதுரையில் செய்தியாளர்களை சந்தித்த போது அவர் தெரிவிக்கையில்,

ஒக்டோபர் 29 ஆம் திகதி நெல்லை மாவட்டம் புளியங்குடி மற்றும் ஓட்டப்பிடாரம் ஆகிய பகுதிகளில் இருந்து மாற்று கட்சியினர் ஆயிரக்கணக்கானோர் புதிய தமிழகத்தில் இணைகின்றனர்.

கடந்த 2006 ஆண்டில் தி.மு.க. அரசு உறுதியளித்த மாதிரி வீட்டு மனை பட்டாக்களை வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

ஜனநாயகத்தை காப்பாற்றும் பொறுப்புடன் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த், ஜெயல லிதா தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணியில் இணைய வேண்டும் என நான் விரும்புகிறேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# பாரதச் செய்திகள்

# பளு தூக்குதலின் இரகசியம் என்ன? இளவரசர் சார்ல்ஸ் ஆச்சரியம்

(புதுடில்லி)

இந்திய பளு தூக்குதல் வீராங்கனைகளைப் பார்த்து வெற்றியின் இரகசியம் என்ன என இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் ஆச்சரியத்துடன் கேட்டு மகிழ்ந்தார்.

டில்லியில் நடக்கும் பொது நலவாய போட்டியை இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் தனது பாரியாருடன் வந்து ஆரம்பித்து வைத்தார். அப்போது விளையாட்டு கிராமத்துக்குச் சென்று அங்கு தங்கியுள்ள வீரர்களை சந்தித்தார். இங்கிலாந்து பளு தூக்குதல் வீராங்கனைகளின் பயிற்சியை பார்வையிட்டுக்கொண்டிருந்த சார்ள்ஸ் திடீரென இந்திய வீராங்கனைகள் பயிற்சி செய்யும் இடத்துக்கு வந்தார். அங்கிருந்து 58 கி.கி. நடப்பு சாம்பியன் ரேணுபாலா தேவி, சந்தியா ராணி, மோனிகாதேவி ஆகியோரை சந்தித்த அவர் உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன எனக் கேட்டு வியந்துள்ளார்.

இது குறித்து பளு தூக்குதல் அணியின் மானேஜர் சீனிவாஸ் ராவ் கூறுகையில், இங்கிலாந்து பளு தூக்குதல் வீராங்கனைகளுடன் சார்ள்ஸ் பேசிக் கொண்டு இருந்தார். இதை நாங்கள் பார்த்துக்கொண்டிருந்த போது திடீரென ஆச்சரியப்படும் விதமாக அவர் எங்களை நோக்கி வந்தார். பின் எங்களுக்கு கைகொடுத்து வாழ்த்துக்களை தெரிவித்தார். அருகில் இருந்த ரேணுபாலா தேவியை பார்த்து பொதுவாக இந்திய அணியினர் பளு தூக்குதலில் அதிக பதக்கங்களை வெல்கின்றனர். இந்த வெற்றியின் இரகசியம் என்ன என்றார்.

நமது வீராங்கனைகள் பளு தூக்குவதை பார்த்து இளவரசரின் பாரியார் கமீலா பார்க்கரும் ஆச்சரியப்பட்டார் .சுமார் 20 நிமிடம் அங்கிருந்த சார்ள்ஸ் பின் வீரர்களுக்கான வசதிகள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார் என சீனிவாஸ் ராவ் தெரிவித்தார். (2)

# விடுதலைப்புலிகளின் தடை குறித்து ஆராயும் வகையில் ஆலோசனைகூட்டம்

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள தடை குறித்து விவாதிக்க சென்னையில் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மத்திய அரசு தடையை நீடித்து வருகிறது.

கடந்த மே மாதம் 14 ஆம் திகதி விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

விடுதலை புலிகள் அமைப்பு இலங்கையில் ஒழிக்கப்பட்டுவிட்டதால் தடையை நீடிக்க தேவையில்லை என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டவர்கள் மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

இது குறித்து மேற்கொண்டு ஆலோசனை நடத்துவதற்காக சென்னையில் மத்திய அரசின் சார்பில் கூட்டம் நடைபெறுகின்றது.

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் தமிழர் அமைப்புகள் கலந்து கொண்டுள்ள இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அவரவர் தங்கள் கருத்துக்களை கூறியுள்ளனர்.

இக்கூட்டத்தில் பங்கேற்ற தமிழக பொலிஸார் கடந்த ஆண்டுகளில் விடுதலைப்புலிகள் அமைப்பு தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர். (ஸ்ரீ-2)



டில்லியிலுள்ள இந்தியப் பிரதமரின் இல்லத்தில் மாலைதீவு ஜனாதிபதி முகமது நசீதும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்து விவாதித்தனர்.

# அயோத்தி வழக்கு தீர்ப்பின் மூலம் இரத யாத்திரை நோக்கம் நிரூபிக்கப்பட்டுள்ளது

## அத்வானி பேட்டி

அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதற்காக பிரசார தளபதியாக இருந்து நாடு முழுவதும் இரத யாத்திரை நடத்தியவர் எல்.கே. அத்வானி. இந்த இரத யாத்திரை அரசியலில் பல திருப்பங்களை ஏற்படுத்தியது.

அயோத்தி வழக்கில் அலகாபாத் மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு பற்றி அத்வானி அளித்துள்ள சிறப்பு பேட்டி வருமாறு,

இராமர் கோவில் கட்டுவதற்கு இரத யாத்திரை நடத்தியது சரி என்றே நான் கருதுகிறேன். ஏனென்றால் கடந்த 1949 இல் தொடங்கிய அயோத்தி இராம ஜென்ம பூமி பிரச்சினை பின் 1989 இல் தான் விஸ்வரூபம் எடுத்தது.

பா.ஜனதா அந்த பிரச்சினையை கையிலெடுத்த பின் தான் முக்கியத்துவம் பெற்றது.




இந்தத் தீர்ப்பின் மூலம் எனது இரத யாத்திரையின் நோக்கம் சரி என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பின் மூலம் மக்களின் நம்பிக்கைக்கு சட்டம் அங்கீகாரம் அளித்துள்ளது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2-4)

# வி.வி.எஸ் லக்ஸ்மன் துணிச்சல் இந்திய அணி திரில் வெற்றி

## இறுதிவரை போராடிய ஆஸி. ஏமாற்றம்



(மொகாலி)
வி.வி.எஸ் லக்ஸ்மன் துணிச்சலான துடுப்பாட்டம் கை கொடுக்க முதலாவது டெஸ்ட்டில் இந்திய அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெற்றது.

இறுதிவரை போராடிய அவுஸ்திரேலிய அணி ஏமாற்றமடைந்தது. இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண் டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் வி ளை யாடுகின்றது.

இதில் முத லாவது டெஸ்ட் கடந்த முதலாம் திகதி மொகாலியில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 428 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 405 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்த அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 192 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 216 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் 55 ஓட்டங்களை எடுத்து 04 விக்கெட்டுக்களை இழந்தது.

இந்நிலையில் ஐந்தாவதும் இறுதிநாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சகீர்கான் 10 ஓட்டங்களுடனும், டெண்டுல்கர் 38 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் தோனி 02, ஹர்பஜன் சிங் 02 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து வரிசையாக ஆட்டமிழந்து வெளியேறினர்.

இந்நிலையில் இந்திய அணி 124 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

எனினும் 09-வது விக்கெட்டுக்காக இணைந்த வி.வி.எஸ். லக்ஸ்மன்- இஷாந்த் சர்மா ஜோடி பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

இதில் வி.வி.எஸ். லக்ஸ்மன் அதிரடியாக ஆடி 48 பந்துகளில் அரைச்சதம் கடந்து அசத்த மறுமுனையில் சீனப் பெரும் சுவர் போல் தடுத்தாடிய இஷாந்த் சர்மா நிலைத்து நின்றார்.

இந்த ஜோடியின் பொறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 81 ஓட்டங்களை எடுத்த போது இஷாந்த் சர்மா 92 பந்துகளில் (05 பவுண்டரிகள் உட்பட) 31 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் ஒரு விக்கெட் கைவசமுள்ள நிலையில் 11 ஓட்டங்கள் வெற்றிக்கு எடுக்க வேண்டியசூட்பாயத்தில் லக்ஸ்மனுடன் இணைந்த ஓஜா சிறப்பாக ஆடி நம்பிக்கையளித்தார்.

இந்நிலையில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 58.4 ஓவர்களில் 09 விக்கெட்டுக்களை இழந்து 216 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 79 பந்துகளில் (08 பவுண்டரிகள் உட்பட) 73 ஓட்டங்களையும், பிரஜன் ஓஜா 05 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹில்பென் ஹயூஸ் 04 விக்கெட்டுக்களையும், பொல்லிங்கர் 03 விக்கெட்டுக்களையும், ஹயூரிச் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் இரண்டு இன்னிங்ஸிலுமாக 08 விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்திய அணியின் வெற்றிக்கு வழிசமைத்த சகீர்கான் ஆட்டநாயகனாக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இத் தொடரின் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் எதிர்வரும் 09 ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பமாகிறது.

## இந்து ஆரம்ப பாடசாலையில் ஆசிரியர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் ஆசிரியர் தினம் இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும். இந்நிகழ்வில் யாழ்.வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். தொடக்கவுரையை பாடசாலை அதிபர் எஸ்.தியாகலிங்கம் நிகழ்த்துவார். (ந)

## மின்சாரம் இன்று தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று சில பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

உயர் அழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் இன்று புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய் ஆகிய இடங்களிலும் நாளை வியாழக்கிழமை மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். வேலை முன்னதாக முடிபுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக மின்சாரம் வழங்கப்படும். (ச)

## தன்னலமற்ற சேவையாளர்களை உளமார வாழ்த்துகிறேன்

இத்தனை துன்பங்களின் பின்பும் எம்மவர்கள் கண்களை மூடிக்கொள்ளாது விழித்திருக்க வைத்திருக்கும் எனதருமை ஆசிரியப் பெருந்தகைகளே! இந்நன்நாளில் உங்கள் தன்னலமற்ற சேவையை மனதார எண்ணி வாயாரப் பாராட்டி பெருமகிழ்வடைகிறேன்.

நவீன யுகத்தின் சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேறவல்ல அறிவையும் ஆற்றலையும் பெற்று எமது மாணவ சமுதாயம் முன்னேற அர்ப்பணிப்புடன் உழைக்கும் தகைமையைப் பெறும் வகையிலே உங்கள் வாண்மையை விருத்தி செய்து வளமுடன் வாழ வாழ்த்தி மகிழ்வடைகிறேன்.

திருமதி அ. வேதநாயகம்
கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## பருத்தித்துறையில் வீதி விபத்து வான் சாரதி படுகாயம்

(கரவெட்டி)

பருத்தித்துறை அல்வாய் கிழக்குத் தெருமூடி மடத்தடியில் நேற்று காலை இ.போ.ச. பஸ்ஸும் தனியார் பஸ்ஸும் மோதிக்கொண்டதில் தனியார் பஸ் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸும் பருத்தித்துறைக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக்கொண்டது

சம்பவத்தில் மினிபஸ் சாரதியான அல்வாய் கிழக்கைச் சேர்ந்த இ.கபில்ராஜ் என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் இ.போ.ச பஸ்ஸில் பயணித்த சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

பருத்தித்துறைவீதி அகலமாக்கப்பட்டு வரும் நிலையில் தினமும் விபத்துக்கள் இடம் பெறுவதாக தகவல்கள் தெரிவித்தன. (ச,3,5,24)

## பதிவு செய்யப்படாமல் இயங்கும் விடுதி நடத்துவோர் மீது நடவடிக்கை

### யாழ். அரச அதிபர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தங்குமிடங்கள், விடுதிகள் நடத்துவோர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறையில் பதிவுகளை மேற்கொண்டு சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

முறையாகப் பதிவுகளை மேற்கொள்ளாது இயங்கும் விடுதிகள் மற்றும் தங்குமிடங்கள் நடத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

அண்மைக்காலமாக தென்னிலங்கையிலிருந்து அல்லது நாட்டின்ஏனைய பாகங்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு வருகை தருவோரின் எண்ணிக்கை மிகவும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

அதேவேளை இந்தச் சுற்றுலா பயணிகளுக்கும், யாத்திரிகர்களுக்கும் தங்குமிட, இருப்பிட வசதிகளை வர்த்தக நோக்கில் வாடகைக்கு வழங்கும் வகையில் அதிகமான வீடுகள் விடுதிகளாக மாற்றி அமைக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவை முறையான அனுமதிகளை உரிய உள்ளூராட்சி சபைகளிடம் பெறாமல் தேவையான தங்குமிட வசதிக்கேற்ப நீர் வழங்கல், கழிவகற்றல் வசதிகளை கொண்டிராததையாகவும், சுற்றுப்புறச் சூழலுக்கும் அயலவர்களுக்கும் பாதிப்பினை ஏற்படுத்துவதாகவும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேலும் இவ்விடுதிகள் தாம் இருக்கின்ற பிரதேசத்தினைச் சேர்ந்த உள்ளூராட்சி அமைப்புக்களில் பதிவு செய்ய வேண்டிய தேவை உள்ளதால் அவற்றின் சட்டதிட்டங்களுக்கேற்ப விண்ணப்பங்களை சமர்ப்பித்து பதிவு செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அவற்றின் ஆலோசனைகளுக்கமைய பொருத்தமான நீர் வழங்கல், கழிவகற்றல் வசதிகளை மேற்கொண்டிருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதற்கமைய மேற்படி தங்குமிடங்கள், விடுதிகள் யாவும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாத விடுதிகள், தங்குமிடங்கள் தொடர்பில் அவற்றை மூடி முத்திரை பதிப்பதற்கான நடவடிக்கையும் உரிய அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படவுள்ளது என்பது உரியவர்களின் கவனத்துக்கு கொண்டு வரப்படுகிறது.

மேலும் பொருத்தமான நிபந்தனைகளுக்கு உட்படாத விடுதிகள், தங்குமிடங்கள் தமது விண்ணப்பம் தொடர்பில் தேவையான மீள் பரிசீலனைகளை மேற்கொண்டு உரிய திணைக்களங்களின் ஆலோசனைகளைப் பெற்று தேவைகளைப் பூர்த்தி செய்து விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் விரும்பத்தக்கது என்றுள்ளது. (ச)

## சீனாவும் இந்தியாவும்...

அரசுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை சீனாவும் - இந்தியாவும் இணைந்து முறியடித்திருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் கூட சீனா, ரஷ்யாவுடன் இணைந்து இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை முறியடித்திருந்தது. மேலும் இலங்கைக்கான நிதி உதவிகளை வழங்குவதிலும் இந்தியாவும், சீனாவும் இணைந்தே பணியாற்றி வருகின்றன.

போரின் பின்னர் இந்தியா 800 மில்லியன் டொலர்களை கடனாக வழங்க முன்வந்துள்ளது. 50ஆயிரம் வீடுகளையும் கட்டிக் கொடுக்க அது முன்வந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின்படி ஒரு இலட்சத்து 60ஆயிரம் வீடுகள் தேவை. அதில் மூன்றில் ஒரு பகுதியை கட்டிக் கொடுக்க இந்தியா முன்வந்துள்ளது.

இலங்கையில் முதலீடுகளைமேற்கொள்ள இந்திய நிறுவனங்கள் போட்டியிட்டு வருவதாக இந்தியாவின் ஆடம்பர விடுதிகளில் ஒன்றான தாஜ் விடுதியின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் றெய்மண்ட் பிக்சன் தெரிவித்துள்ளார். (ச-5)

## பாணின் விலை....

| பொருள் | விலை | முன்னைய விலை | தற்போதைய விலை |
|---|---|---|---|
| பாண் | 450 g | 45 /= | 48/= |
| கிறீம் பணிஸ் (ஒரு சோடி) | 150 g | 25 /= | 28 /= |
| ரீ பணிஸ் (ஒரு சோடி) | 130 g | 22/= | 25 /= |
| கொம்பு பணிஸ்(ஒரு சோடி) | 70 g | 14 /= | 16/= |
| அடைக்கேக் | 150 g | 20 /= | 22 /= |
| சங்கிலி பணிஸ் | 130 g | 22 /= | 25 /= |

செய்வது அல்லது விலைப்பட்டியல் இன்றி விற்பனை செய்வது தவிர்க்கப்படல் வேண்டும். இவற்றை மீறுபவர்கள் மீது பாவனையாளர் அதிகாரசபை அதிகாரிகளினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பொன்சேகாவுக்கு...

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகக் கூடிய, ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கம் என்ற முக்கிய சில எதிர்க்கட்சிகளின் அமைப்பு சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி பேரணி நடத்தியுள்ளது.

பொன்சேகாவின் விடுதலைக்காக பத்து லட்சம் பேரின் கையெழுத்துக்களைத் திரட்டும் கையெழுத்து வேட்டையையும் ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கம் நடத்தியது.

மகஜரில் கையெழுத்திட்டதன் பின்னர் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கம் வரலாற்றைக் கூட திரித்துக் கூறுவதாகத் தெரிவித்தார்.

இறுதிக் கட்டப்போரின் போது விடுதலைப்புலிகளை தோற்கடித்து நாட்டில் மக்கள் சுதந்திரமாக நடமாடும் சூழலை ஏற்படுத்திய சரத் பொன்சேகா இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே நாட்டு மக்கள் ஜனாதிபதியை தேர்ந்தெடுத்தார்களே தவிர சர்வாதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக அல்லவென மக்கள் விடுதலை முன்னணியினர் இந்த பேரணியின் போது கோஷமிட்டனர்

அத்துடன் ஜக்கிய சோஷலிசக் கட்சி, இடதுசாரி விடுதலை முன்னணி உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகளும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தன.

நாட்டின் அரசியலமைப்பு மற்றும் சட்ட நியமங்களுக்கு புறம்பான முறையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் அரசியல் மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதாகக் கூறினார் இடதுசாரி விடுதலை முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன.

ஆனால் அரசாங்கம் முன்னர் கூறியது போல் 'பொன்சேகாவை ஒரு வீரனாக தாம் ஒருபோதும் கருதவில்லை' என அந்தக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது.

நீதி கேட்டு போராடிய தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய படுகொலை யுத்தத்தின் முக்கிய சூத்திரதாரியாக இருந்தமையை வீரம் எனக் கருத முடியாது எனவும்,ஆனால் பொன்சேகாவின் அரசியல் மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்க பின்னிற்கப் போவதில்லை எனவும் இடதுசாரி விடுதலை முன்னணி கூறியுள்ளது.

இதற்கிடையே, ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய அமைச்சர் மைத்திரிபால,

பொன்சேகா தளபதியாக இருந்த காலத்தில் அவராலேயே ஐயாயிரத்துக்கும் அதிகமான இராணுவ வீரர்கள் இராணுவ நீதிமன்ற விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் நிலையில், அது பற்றி எதிர்க்கட்சிகள் வாய் திறக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ச-3,5)

## யாழ்ப்பாண பல்கலைக்...

பல்கலைக்கழகத்தில் முதல் சட்டதுறை பட்டதாரிகள் 11 பேர், சூழமைவின் நெருக்கடிகளுக்குள் கல்வியை இடைநடுவில் தொலைத்து மீண்ட மாணவர்களில் ஒரு தொகையினரும் இன்று பட்டம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மேம்பாட்டுக்கும் சமூக பண்பாட்டு மேன்மைக்குமாய் உழைத்த அறிஞர்களும் கலைஞர்களும் கௌரவ பட்டங்களைப் பெறவுள்ளனர். நாடறிந்த சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி எம்.கணேசரத்தினத்துக்கு மருத்துவத்துறைக்கான அர்ப்பணிப்பின் பங்களிப்புக்கான கௌரவ கலாநிதி பட்டம் முதலாவது அமர்வில் வழங்கப்படவுள்ளது.

இரண்டாவது அமர்வின் போது, இசைப் பாரம்பரியத்தின் இராஜ பாவாத்தியமான நாதஸ்வர கலையில் சாதனை படைத்த நாதஸ்வர வித்துவான் பஞ்சாபிகேசன், 3-வது அமர்வின் போது நாடகக் கலைக்கும் உலகளாவிய எங்கள் பண்பாட்டின் பரவலுக்கு பெரும் பங்காற்றிய வணக்கத்துக்குரிய மரியசேவியர் அடிகளாரும் கௌரவ பட்டத்தினை பெறவுள்ளனர்.

நிறைவு அமர்வின் போது பார்வையற்ற பிள்ளைகளுக்கான விசேட கல்விக்கான முன்னோடியாகி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காய் தன் வாழ்நாளை அர்ப்பணித்த வாழ்வக ஸ்தாபகர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களுக்கு தேகாந்த நிலையில் கௌரவப்பட்டம் வழங்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மேம்பாட்டிலும் தாம் சார்ந்த அறிவியல் துறைகளின் வளர்ச்சியிலும் அர்ப்பணிப்பான பங்களிப்பினை ஈர்ந்த முன்னாள் துணை வேந்தரும், புவியியல் துறை சிரேஷ்ட பேராசிரியருமான பேராசிரியர் பொன் பாலசுந்தரம் பிள்ளை, முன்னாள் பட்டப்படிப்புகள் பீடாதிபதியும் தமிழ் பேராசிரியருமான அ.சண்முகதாஸ், முன்னாள் கலைப் பீடாதிபதியும் இந்து நாகரிகத்துறை பேராசிரியருமான பேராசியர் பா.கோபாலகிருஷ்ண ஐயர், கல்வியியற்துறை பேராசிரியர் சபா ஜெயராசா ஆகியோர் இலக்கிய கலாநிதி பட்டங்களைப் பெறவுள்ளனர். (ச)

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
பத்திரிகை | தொலைக்காட்சி | வானொலி | இணையம்
ஊடகக் கல்வி
IT ORIENTED JOURNALISM COURSE
அச்சு - வானொலி - தொலைக்காட்சி - இணைய ஊடக நுட்பங்களில் சிறந்த தேர்ச்சி வழங்கும் 3 மாத கால உலகத்தரம் வாய்ந்த கற்கைநெறி
➤ விரிவான கையேடுகள் ➤ நூலக வசதி
➤ கணினி - இணைய ஆய்வுகூடம்
➤ Audio - Video Lab ➤ Basic Photography
சிரேஷ்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் (IIJ) அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளரினால் நடத்தப்படும்
நவீன ஒளிப்படக்கலைப் பயிற்சி
- ஒளிப்படக் கலை அடிப்படைகள்
- சகலவிதமான படப்பிடிப்பு உத்திகள்
- SLR, Digital Camera Techniques
- Photo Editing
- Studio, Lab Trainings And more....
Creative Graphic Designing
கற்பனா சக்தி, கலைநுட்பம், அழகியல் கண்ணோட்டம் படைப்பாக்கத் திறனுடன் கூடிய கணினி வரைகலைப் பயிற்சி
Adobe Pagemaker, Photoshop, Indesign...etc.
புதிய பிரிவுகள் ஆரம்பம் ஒக்டோபர் 9 சனிக்கிழமை
MEDIA
சிகரம் ஊடக இல்லம், 221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60

## மரண அறிவித்தல்

### அமரர் கந்தையா பாலசுப்பிரமணியம்



சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் ஜெயந்திநகர் கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் அவர்கள் 05.10.2010 அன்று காலமானார்.

அன்னார் கந்தையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், நாகமணி செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, கண்மணி, நித்தியானந்தம்,ஆனந்தர்,பரதகுலராணி,ஏரம்பு, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரன் (லண்டன்), ரஞ்சிதமலர் (சுவிஸ்), சந்திரகுமார் (கிளிநொச்சி), நந்தகுமார் (லண்டன்), சந்திரவதனி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

றஜனி (இந்தியா), சுந்தரசிவம் (சுவிஸ்), பவனேஸ்வரி (கிளிநொச்சி), வாசுகி (லண்டன்), ஜெயகாந்தன் (சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும்,ஜெரின்(இந்தியா),கிருசான் (சுவிஸ்), கிருசனா (சுவிஸ்), ஹெறினா (கிளிநொச்சி), தீபிகா (கிளிநொச்சி), துசாந்தன் (கிளிநொச்சி), பவிணாஸ் (கிளிநொச்சி),டனுஜன் (லண்டன்),டனுஜா(லண்டன்), ஜீவிகா (சாவகச்சேரி) ஆகியோர்ரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.10.2010 நண்பகல் 12.00 மணியளவில் அவரது தற்காலிக ஜெயந்திநகர் கிளிநொச்சி இல்லத்தில் நடைபெற்று ஆனந்தநகர் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

ஜெயந்தி நகர், கிளிநொச்சி. (C-1349)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.
தொ.பே. 0779673788

## எட்டு வருட...

பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

ஆங்கில மொழிக் கற்பித்தல் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் தற்போது ஆங்கில ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.


8 வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவை உள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (ச-5)

## அமெரிக்க...

தூதுவரை அப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என வீரவன்ச கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க படையினர், ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் முகாமிட்டுள்ளதை வெளிநாட்டு ஆக்கிரமிப்பாகக் காணாத அமெரிக்க தூதுவர், வடக்கு கிழக்கில் உள்ள இலங்கை இராணுவத்தினரை வெளிநாட்டு இராணுவமாக கணிப்பிடுவதாகவும் இதனை பாரதூரமான விடயமாக கருதி இராஜதந்திர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ச-5)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010.10.06 இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் குருநகரைச் சேர்ந்தவரும் சென் யேம்ஸ் கல்விக்கழக அங்கத்தவருமாகிய

**திரு. மரியதாஸ் கியூமன்**

(B.Com) அவர்கள்

முதுமாணி (M.A) பட்டம் பெறுவதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

No. 21, அடப்பன் றோட் 1வது ஒழுங்கை, குருநகர்,யாழ்ப்பாணம்.

நிர்வாகிகள்
சென் யேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம், குருநகர்.

(2610)

### யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## விலை அதிகரிப்பு

யாழ்.அரச அதிபர் ,விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளின் அனுமதியுடன் எமது சங்கம் வெதுப்பக உற்பத்தி பொருட்களுக்கு 06.10.2010 (இன்று )தொடக்கம் பின் வரும் விபரப்படி விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| பொருட்கள் | | விலை |
|---|---|---|
| பாண் | 450 g | 48.00 |
| கிறீம் பணிஸ் | 150 g | 28.00 |
| ரீ பணிஸ் | 130 g | 25.00 |
| கொம்பு பணிஸ் | 70 g | 16.00 |
| சங்கிலி பணிஸ் | 130 g | 25.00 |
| அடைக்கேக் | 150 g | 22.00 |

கா.பாஸ்கரன்
செயலாளர்

(C-1353)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.